
கோகுலம்

GOKULAM

ஜூன் '99 ரூ. 6/-

யூடிஐ வழங்கும் லேபில்கள் உள்ளே!



ஆரோக்கிய ரகசியம்!


தெரியுமா நான் ரஸ்னா
அக்வா ஃபன் குடித்த போது
யாரையெல்லாம்
சந்தித்தேன் என்று?
அறிமுகம்
Rasna
AQUA FUN
Rasna
பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள், கத்தரிப்பூ
வண்ணம் போன்ற பல வண்ணங்களில்
அழகிய மீன்களை நான் சந்தித்தேன். அங்கே
மேலும் பெரிய பெரிய டால்பின்கள்,
ஆக்டோபஸ்கள் மற்றும் சுறாக்களும்
கூட இருந்தன. இந்த வண்ணமயமான
உலகத்திலிருந்து கிடைத்த தூண்டுதல்
மூலமே ரஸ்னாவின் புதிய காம்பினேஷன்
ஃப்ளேவர் அக்வா ஃபன் உருவானது.
எனவே, இதன் ருசி கடலைப்போல்
அற்புதமானது. ஆதலால், கடலின்
புத்துணர்ச்சி உங்களுக்காக
32 கிளாஸ்களிலும்
ருசித்து
அனுபவிக்க.
கடலின்
குளிர்ச்சி நிரம்பிய
இணையற்ற பானம்!
Mudra:RASNA:98/369 Tam.

கோகுலம்
ஜூன் '99
மலர் : 17 இதழ் : 5



அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

"ஒருநாள் நல்ல மழை கொட்டியது. ஜலதோஷம் பிடித்துக் கொண்டது. உடனே மஃப்ளரைச் சுற்றிக் கொண்டு, குடை பிடித்துக் கொண்டு டாக்டரிடம் போனேன். ஏனென்றால்,

"டாக்டர் பிழைக்க வேண்டுமல்லவா?

"டாக்டர் மருந்துச் சீட்டு எழுதித் தந்தார். ஏனென்றால்,

"மருந்து தயாரிப்பாளர்கள் பிழைக்க வேண்டுமில்லையா?


"மருந்துச் சீட்டை எடுத்துக் கொண்டு மருந்துக் கடைக்குப் போய் மருந்து வாங்கினேன். ஏனென்றால்,

"மருந்துக் கடைக்காரர் பிழைக்க வேண்டுமில்லையா?

"மருந்து வாங்கிக் கொண்டு வீடு திரும்பி, பாட்டிலைத் திறந்து மருந்தை சாக்கடையில் கொட்டினேன்! ஏனென்றால் நானும் பிழைக்க வேண்டுமில்லையா?"

- அமரர் கல்கி அவர்கள் சொல்லி மகிழ்ந்த ஜோக் இது. ஜோக்தான் என்றாலும் ஆழ்ந்த உட்பொருளைக் கொண்டிருக்கிறது.

மருந்துகள் வியாதியை மட்டும் குணப்படுத்துவதில்லை. கூடவே வேறு வேண்டாத விளைவுகளையும் உடலில் உண்டாக்குகின்றன. அவற்றை side effects என்று சொல்கிறோம். அவை உடல் சோர்வு, பலவீனம் என்பதாக இருக்கலாம், ஒவ்வாமையாக இருக்கலாம், அல்லது மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கி சில சமயம் வியாதியை விடக் கொடியதாக விளங்கலாம். இதற்குக் காரணம் நமது உடலின் ரசாயனத்துடன் மருந்தின் ரசாயனம் மோதுவதுதான்.



இப்படிக் கூறுவதால் உடம்புக்கு வரும்போது மருந்தே சாப்பிடக் கூடாது என்பதில்லை. டாக்டர் மேற்பார்வையில் சரியான அளவில் மருந்து சாப்பிட்டு உடம்பை குணப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் நோய் வந்த பின் மருந்து உட்கொள்வதை விட உடம்புக்கு ஒன்றும் வராமலே பாதுகாப்பது நல்லதல்லவா?

இதனால்தான் காய்ச்சி, ஆறவைத்த தண்ணீரே குடிக்க வேண்டும், ஆரோக்கியமான உணவு உண்ண வேண்டும், தினமும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்வது. தினந்தோறும் மாலையில் சற்று நேரம் ஓடி ஆடி விளையாடுவது நல்ல தேகப் பயிற்சிதான். அத்துடன் காலை நேரத்தில் இருபது முதல் முப்பது நிமிஷம் வரை யோகாசனப் பயிற்சிக்கு ஒதுக்கினால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும். உடம்பு, நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறும். உடல் வளர்ச்சி சீராக இருக்கும். இவை மட்டுமல்ல, ஆன்ம பலம் அதிகரித்து, படிப்பில் மேலும் சிரத்தை உண்டாக்கும். பரீட்சை டென்ஷன் நீங்கும். பிரச்னைகளை எதிர்கொள்ள மனத்துணிவு அதிகரிக்கும்.

என்னிடம் இந்த நாட்டின் அதிகாரத்தை ஒரு மணி நேரத்துக்குக் கொடுத்தால் தேச நலனை முன்னிட்டு ஒரே ஒரு உத்தரவு போட்டு விட்டுத் திருப்தி அடைவேன். அதாவது, 'நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்கள் அனைத்திலும் யோகாசனப் பயிற்சிக்கு வசதி இருக்க வேண்டும். அதற்கேற்ப யோகாசனம் பயில்விக்கும் ஆசிரியர்கள் உருவாக்கப்பட வேண்டும்.'

இவ்வளவு உயர்ந்த விஷயத்தை கோகுலம் வாசகர்களாகிய நீங்களாவது புறக்கணிக்காமல் ஒரு நல்ல ஆசானை அடைய முயற்சி செய்யலாமே?

அன்புடன்,

ஒ. ராஜேந்திரன்
ஆசிரியர்.


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

கோகுலம்

ஜூன் 1999

இந்த இதழில்...









உவகை கொண்ட நேரங்கள்...

பாலு வீட்டு மாடியில்
பத்து நண்பர் கூடினர்
வால் முளைத்த வேளையை
வகையா யெண்ணிப் பார்த்தனர்.

லீவு விட்ட மாதத்தில்
வாடம் வைத்த குதிரையாய்
மேவு பூமி எங்கணும்
மேய்ந்த கதை பேசினர்.

ஏரி, குளம் கண்டதும்
எகிறிக் குதித்த ஆனந்தம்,
ஊறி நின்ற எருமைபோல்
உவகை கொண்ட நேரங்கள்;

பட்டம் விட்ட மாலையில்
பரவசத்தில் ஆழ்ந்தது,
வட்ட நிலா வேளையில்
வானம் பார்த்து நின்றது;

பாட்டி வீடு போனது,
பத்துக் கதை கேட்டது,
வீட்டில் இருந்த வேளையில்
வெறுமே தூங்கிக் கழித்தது;


திருவிழாவில் தொலைந்தது,
திரும்பி மீண்டு வந்தது,
ஒருவர் மாற்றி ஒருவராய்
உவகை பொங்கப் பேசினர்.

"பள்ளி திறந்து ஆச்சுது,
பாடம் நிறைய இருக்குது,
அள்ளி எடுத்துப் படிக்கணும்
அதுக்கு மேல, உயரணும்!"

– என்று சொன்ன பாலுவை
ஏற்றிப் புகழ்ந்த நண்பர்கள்
அன்று முதல் படிப்பிலே
ஆழ்ந்து போகத் தொடங்கினர்!

– ஜிண்டு

எது, எப்படி?



சூரியன் சுற்றுகிறதா?

சூரியனுடைய குடும்ப உறுப்பினர்களான ஒன்பது கோள்களும், சூரியனையே மையமாக வைத்து சுற்றி வருகின்றன என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இப்போது உங்களுக்கு ஒரு வினா. சூரியன் சுற்றுகிறதா? இல்லையா? என்ன பதில் தெரியவில்லையா! சூரியனும் சுற்றுகிறது. எப்படி? நம் சூரியக் குடும்பம் போல், கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்கள் இந்தப் பால்வெளி மண்டலத்தில் உள்ளன. அவையெல்லாம் பால்வெளி மண்டலத்தை மையமாக வைத்துச் சுற்றி வருகின்றன. அதுபோலவே சூரியனும். அது தன் குடும்ப அங்கத்தினர்களுடன், பால்வெளி மண்டலத்தைச் சுற்றிவர எத்தனை வருடங்கள் ஆகின்றன தெரியுமா? கிட்டத்தட்ட 22.5 கோடி வருடங்கள்! இதைத்தான் நாம் ஒரு பிரபஞ்ச ஆண்டு என்கிறோம். சூரியன் இதுவரை ,பால்வெளி மண்டலத்தை 20.9 முறை சுற்றியிருக்கிறது. இன்றைய பிரபஞ்ச ஆண்டுக்கு முற்பட்ட பிரபஞ்ச ஆண்டு, நிலக்கரி காடுகள் இருந்தபோது (அதாவது இப்போது நிலக்கரியாய் கிடைப்பவை கோடிக்கணக்கான ஆண்டுகட்கு முன் காடுகளாய் இருந்தன) நிலவியது. மனித சமுதாயம் உருவாகி இன்னும் ஒரு பிரபஞ்ச ஆண்டு கூட பூர்த்தியாகவில்லை.



சூரியன் பூமியை விட 3,33,000 மடங்கு பெரியது. ஆனால் அதன் அடர்த்தி பூமியை விட கால் பகுதி மட்டுமே! சூரியனின் விட்டத்தில், பூமிப்பந்தை வரிசையாய் அடுக்கினால், கிட்டத்தட்ட 109 பூமிகளை நிற்கவைக்க முடியும். சூரியனும், பூமி போலவே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியே சுழல்கிறது. பூமி கடினமான உலோகப் பாறைகளால் ஆனதால், அதன் மேற்பகுதி ஒரே சீராகச் சுழல்கிறது. ஆனால் சூரியன் ஒரு வாயுக்கோளம். எனவே இது சுழலும் போது, அதன் நடுப்பகுதி (விட்டப்பகுதி) வேகமாகவும், துருவப்

பகுதிகள் மெதுவாகவும் சுழலுகின்றன. சூரியன் தன் அச்சில் ஒருமுறை சுழல, நடுப்பகுதிக்கு 27 நாட்களும், துருவப் பகுதிகளுக்கு 32 நாட்களும் ஆகின்றன என்றால் உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும். பூமி தன் அச்சில் 23 பாகை சாய்வாக இருப்பது போலவே, சூரியனும், தன் அச்சில் 7 பாகை சாய்வாகவே உள்ளது.



வேகமாக வளரும் உறுப்பு எது?

நம் உடம்பிலேயே மிக வேகமாக வளரும் உறுப்பு எது தெரியுமா? இந்த வளர்ச்சியில் முடிக்கும், நகத்துக்கும்தான் பெரிய போட்டி நடைபெறுகிறது. இதில் இறுதியில் வெற்றி பெறுவது 'முடி' (ரோமம்)தான்! எப்படி? தலையிலுள்ள முடிதான், உடல் உறுப்புகளிலேயே மிக வேகமாக வளரும் பகுதி. முடி, ஒரு வருடத்திற்கு 12.045 செ.மீ. நீளம் வளருகிறது. அதாவது ஒருநாளைக்கு 0.33 மி.மீ. வளருகிறது. ஆனால் நகம் ஒருநாளைக்கு 0.1 மி.மீ. நீளம்தான் வளருகிறது. முடி, நகம் இரண்டுமே தோலிலிருந்து உருவாகும் உறுப்புகள் ஆகும்!

— மோகனா

கோகுலம் க்விஸ் முடிவு

நிறைய பேர் இப்போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்டாலும் எட்டுப் பேரே சரியான விடைகளை அளித்துள்ளனர்.

ரூபாய் இருபத்தி ஐந்து பரிசு பெறுவோர்:


1. அருணா கோபி, அரும்பாக்கம், சென்னை.
2. டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.
3. கே. இலக்கியஅரசு, எட்டாம் வகுப்பு, நவோதயா வித்யாலயா, ராயன்பாளையம்.
4. கே. இளங்கோவன், ஏரிக்கரை, தருமபுரி மாவட்டம்.
5. பி. ப்ரியதர்ஷிணி, ஆறாம் வகுப்பு, கே.புதூர், மதுரை மாவட்டம்.
6. எம். வீரமணி, தும்பல் கொள்ளை, தருமபுரி மாவட்டம்.
7. ஏகாம்பர ஈஸ்வரி, தஞ்சாவூர்.
8. ஷா. அம்சத், ஏழாம் வகுப்பு, து.க. அரசு மேல் நிலைப் பள்ளி, நத்தம், திண்டுக்கல் மாவட்டம்.

சரியான விடை

1. கோலா கரடிகள் **ஆஸ்திரேலியா** நாட்டில் வாழ்கின்றன.
2. ஒலிம்பிக்கில் வழங்கப்படும் தங்கப் பதக்கம் சுத்தமான தங்கம். சரியா, தவறா? **தவறு.**
3. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கருத்தை வெளியிட்டவர் **சார்லஸ் டார்வின்.**
4. பால் பற்கள் என்பவை குழந்தைப் பருவத்தில் முளைக்கும் முதல் **20** பற்கள்.
5. உலகிலேயே மிகப் பெருங்காவியம் **மகாபாரதம்.**
6. நீண்ட காலம் உயிர் வாழும் பிராணி **ஆமை.**
7. சமீபத்தில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற இந்தியப் பெண்மணி **ஜோதிர்மயி சிக்தர்.**
8. வெறி நாய்க் கடிக்கு மருந்து கண்டு பிடித்தவர் **லூயி பாஸ்டர்.**
9. ரோம் நாட்டு கடல் தெய்வத்தின் பெயர் கொண்ட கோள் **நெப்டியூன்.**
10. உலகிலேயே மிகப் பெரிய பறவை **ஆஸ்ட்ரிச்.**

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!


மீனா, ரமாவைப் பார்த்து—
உயர்ந்தவர் யார்?
ரமா, உன் பை ப்ரமாதமாயிருக்கே!
உன் டிரஸ் கூட!
நானும் இதுமாதிரி வாங்கணும்!
கதை: பா.கவிதா
உன்னால் எப்படி வாங்க முடியும்? இது எங்கண்ணன் அமெரிக்காவிலிருந்து அனுப்பியது!
இந்த அலட்டல் தேவைதானா?
ரேஷ்மாவுக்கு ரமா மீது எரிச்சல் வந்தது
ரேஷ்மா தன் பேனாவைத் திறந்து காட்டினாள்.
திறந்த உடன் ம்யூசிக் வருதே!
இது என் அண்ணன் சிங்கப்பூரிலிருந்து அனுப்பியது! அவர் அங்கே கம்ப்யூட்டர் இஞ்சினியர்.
அஃப்டரால் சிங்கப்பூர்தானே.. எங்கண்ணன் அமெரிக்கா!


எங்கண்ணன் வெறும் இஞ்ஜினியர் இல்லை — கம்ப்யூட்டர் இஞ்சினியர்!
?
அமெரிக்காவில் இஞ்சினியராயிருப்பது தான் ஒசத்தி!
எங்க அண்ணன் தான் ஒசத்தி!
எங்கண்ணன் தான் ஒசத்தி!
அங்கே கீதா வந்தாள் —
இங்கே என்ன சண்டை?
மீனா அவளிடம் —
வா கீதா. நீ தான் ரமா — ரீஷ்மா இவங்களுக்கும் நியாயம் சொல்லணும்!


அவர்கள் சண்டை இன்ன தெரியு அறிந்த கீதா–
?
உங்க அண்ணன்களைவிட என் அண்ணன் தான் உசத்தி!
ஆ!
அப்படி என்ன உசத்தி?
மருத்துவத் துறையில் பெரிய படிப்பு படிச்சிட்டு எந்த வெளிநாட்டுக்கும் ஓடிடாம, கிராமத்துக்குப் போய்ச் சேவை செய்கிறாரே!
அட ஆமா! சாரி கீதா!
நீ சொல்றது சரிதான், கீதா.
நமக் குள்ளே மன்னிப் பெல்லாம் எதுக்கு... இன்னும் சொல்லப் போனா...
..ஒருத்தரும் தாழ்ந்தவங்க கிடையாது. எல்லாரும் உயர்ந்த வங்க தான்.





1					■	2		3
	■	4	■	5			■	
	■	■	■	6	■	■	■	
7				■	8			
■	■	■	■	■	■	■	■	■
9				■				10
	■	■	■		■	■	■	
	■			11	■	12	■	
		13	■	14				16

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. பலவகை பூக்கள் சேர்த்துக் கட்டிய சரம் (5)

5. பாலைவனத் தாவரம் (3)

7. பூக்களை இப்படியும் அழைக்கலாம் (4)

8. ஆசியா என்பது ஒரு .... (4)

9. முன்பெல்லாம் பெரிய கிணற்றிலிருந்து தண்ணீரை இதன் மூலம் இறைப்பார்கள் (4)

14. தார் பாலைவனம் இங்கு உள்ளது (5)

வலமிருந்து இடம்

3. தேவையின்றி சண்டை போடுவதை இப்படிச் சொல்லலாம் (3)

10. கல்லூரியில் படித்து இது வாங்கலாம் (4)

11. அளவாக வெட்டப்பட்ட மரத்துண்டு (3)

13. பூச்சியினத்தைச் சேர்ந்த சிறிய உயிரினம் (3)

மேலிருந்து கீழ்

1. சர்க்கரை இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது (4)

2. குழம்பு செய்ய இது அவசியம் (2)

3. நிறத்தை இப்படியும் அழைக்கலாம் (4)

9. சேலம் மாவட்டத்திலிருக்கும் மலைவாசஸ் தலம் (4)

10. ராமன் காட்டிலிருக்கும்போது அரசாண்ட ராமனின் சகோதரன் (4)

12. பேருந்தை ஆங்கிலத்தில் இப்படி கூறுவோம் (2)

கீழிருந்து மேல்

4. புகழ் பெற்ற கத்தோலிக்க திருக்கோயில் இந்நகரில் உள்ளது (2)

6. விரல்களில் இருக்கும் இது வெட்ட, வெட்ட வளரக்கூடியது (3)

13. பலகாரங்களில் ஒன்று. காகம் இதைத் தூக்கிச் சென்றதாகக் கதை உண்டு (2)

14. பாட்டிற்கு இது அவசியம் (3)

— நா. கௌரி,

மாணவி, சென்னை –68.

விடை 72- ஆம் பக்கம்

உனக்கு என்ன லாபம்?

ஜமதக்னி

கோபால் வீட்டுக்குள் நுழைந்தான். அவனுக்காக சபேசன் காத்திருப்பதைக் கண்டு, "இப்பத்தான் வந்தியா? இல்ல வந்து ரொம்ப நேரமாயிருச்சா? எனக்குப் பள்ளியில் நேரமாகி விட்டது. ஒரு அஞ்சு நிமிஷம் இரு. வந்துடறேன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனான்.

கோபால் எட்டாம் வகுப்பு படிக்கிறான். பிறருக்கு உதவ வேண்டும் என்ற பரந்த குணம் உடையவன். சபேசன் ஒரு ஏழை மாணவன். ஆறாம் வகுப்பு படிக்கிறான்.

சபேசன் நன்றாகப் படிக்கும் மாணவன்தான் என்றாலும் கணிதத்தில் கொஞ்சம் சுமார்தான். அவனுக்கு டியூஷன் வைக்க அவன் அப்பாவால் முடியாது. அவன் நிலையைப் புரிந்து கொண்ட கோபால், சபேசனைத் தினமும் தன் வீட்டிற்கு வரச் செய்து, அவன் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பான்.

அன்றும் கோபால் சபேசனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். சபேசன் கிளம்பிய போது, கோபாலின் நண்பன் சாரங்கன் வந்தான்.

"என்ன கோபால், உன் சேவை முடிந்ததா?" என்று வழக்கம் போல் கேலி செய்ய ஆரம்பித்தான் சாரங்கன். கோபால் பதில் ஏதும் சொல்லாமல் புன்னகைத்தான்.

"கோபால்... நான் சொல்றேன்னு தப்பாக நினைக்காதே. நீ சபேசனுக்குப் பாடம் சொல்லித் தரும் நேரத்தில் உன் பாடங்களைப் படித்தால் நீ இன்னும் அதிக மதிப்பெண்கள் வாங்கலாம், இல்லையா?" என்றான் சாரங்கன்.

"உண்மைதான். ஆனால் நாம் தினமும் நிறைய நேரம் சும்மா இருக்கிறோம். வெட்டிப் பேச்சு, டி.வி. என்று. அந்த நேரத்தில் படிக்கலாம். மேலும் ஒருவருக்கு உதவி செய்வதால் நாம் ஒன்றும் குறைந்து போய் விட மாட்டோம்."

"அவனுக்கு உதவுவதால் உனக்கு என்ன லாபம்?"

"இலாபக் கணக்குப் போட்டு நாம் எதையும் செய்யக் கூடாது. நல்ல செயல்கள் நல்ல விளைவுகளை உண்டாக்கும்" என்று கோபால் ஆணித்தரமாகப் பேசி சாரங்கனின் வாயை அடைத்தான்.

ஒரு மழைக்கால மாலை. அம்மா கடைக்குப் போகச் சொன்னார். கோபாலும் அம்மா பேச்சைத் தட்டாமல் கிளம்பினான். சொல்லி வைத்தாற்போல சாரங்கன் வந்து நின்றான். இருவரும் குடையை எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

கடையில் ஒரே கூட்டம். நேரமாகி விட்டது. மழைக்காலம் ஆதலால். நன்றாக இருட்டி விட்டது.

"டேய் கோபால், ரொம்ப லேட்டாயிருச்சு. இந்தக் குறுக்கு வழியில் போயிடலாம்" என்றான் சாரங்கன்.

"வேண்டாம் சாரங்கா... கொஞ்ச நேரம் கூட ஆனாலும் நேர்வழிதான் பாதுகாப்பு" என்றான் கோபால்.

"நான் சொல்றதைக் கேளு" என்று சொல்லிக் கொண்டே சாரங்கன் குறுக்கு வழியில் நடந்தான். வேறு வழி இல்லாமல் கோபாலும் அவனைப் பின்தொடர்ந்தான். அந்த இடத்தில் வீடே கிடையாது. பகல் நேரத்திலேயே பயமாகத்தான் இருக்கும். பாதி தூரம்



நான் பின்னால வரும்போதே மிரட்டறவன் யாரு?" என்று அந்தக் குரல் அதட்டியது.

முரடன் ஓடியே போய் விட்டான். முரடனை மிரட்டியவர், "தம்பி! நீங்க யாரு? ஏன் இந்த வழியாக வந்தீங்க?" என்று கேட்டார். சாரங்கன், கோபால் இருவரும் அவர்கள் படிக்கும் பள்ளி, வகுப்பு பற்றிய விவரங்களைச் சொன்னார்கள்.

"அட, நீதான் அந்தக் கோபாலா? நான் சபேசனின் அப்பா. தம்பி, நீ என் பையனுக்குச் செய்யற உதவிக்கு ரொம்ப நன்றி. இரவு நேரங்களில் தனியாக வரக் கூடாது. நான் வரேன் என்று சொல்லி விட்டுச் சென்றார் சபேசனின் அப்பா.

"பாருடா சாரங்கா. நா சபேசனுக்குச் செய்த உதவி இன்று நம்மைக் காப்பாற்றியது. நாம செய்யற உதவி என்றைக்கும் வீண் போகாது" என்றான் கோபால்.

"உண்மைதான்" என்றான் சாரங்கன்.

போனவுடன் இருவருக்கும் பயமாகி விட்டது. கோபாலிடம் பணம் கொஞ்சம் இருந்தது. என்ன செய்வது?... என்று மிரண்டனர்.

"டேய்... தம்பிகளா" என்ற கரகரப்பான குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். ஒரு முரட்டு உருவம்... "உங்க கையில இருக்கிற காசைக் கொடுத்திட்டு ஓடிடுங்க" என்றது. இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த போது, "யாருப்பா அது? நானும் பின்னாடிதான் வரேன்" என்று வேறு ஒரு குரல் கேட்டது. மூவரும் திடுக்கிட்டனர். "அந்த இரண்டு பேரும் நம்ம பசங்கதான்.

''வெயிலின் அருமை நிழல்ல தெரியும்கிற பழமொழியின் அடிப்படையிலே புதுமொழி ஒண்ணு சொல்லு பார்ப்போம்?''

''சில்லறையின் அருமை பஸ்ல தெரியும் சார்!''

– நரேந்திரன்




பாலைவனம்

ஆழி




உலகில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம்தான். இதன் பரப்பளவு ஆப்பிரிக்கக் கண்டத்தின் அளவுக்குச் சமம்.





பாலைவனத்தில் ஓர் ஆண்டில் ஒரு சில துளிகள் மழையே பெய்யும். சில சமயம், இரண்டு மூன்று ஆண்டுகளில் தொடர்ந்தாற் போல் சிறு தூறல்கள் கூட இல்லாமல் போகும்! தென் அமெரிக்காவில், சிலி நாட்டில் உள்ள 'டி அட்டகாமா' என்னும் பாலைவனத்தில் 1571 முதல் 1971 வரை 400 ஆண்டுகள் மழையே பெய்ததில்லை!

பாலைவனங்களில் ஈச்ச மரங்கள் நன்கு வளர்கின்றன. ஈச்சமரம் இளம் செடியாக இருக்கும் போதே, அதன் வேர்கள் ஆழத்தில் இருக்கும் நீரைத் தேடி, வெகு வேகமாக வளரத் தொடங்குகிறது.




'ஹாலோஸ் டாஷிஷ் காஸ்பிகா' என்னும் பாலை வனத் தாவரத்தின் தண்டை விட, வேர்கள் 14 மடங்கு நீளமானவை. அது 30 மீட்டர் ஆழம்வரை பூமிக்குள் வேர்களைச் செலுத்தி நீரை உறிஞ்சுகிறது!






இங்கே 'ஸக்வாரோ' என்னும் சப்பாத்திக் கள்ளி, சுமார் 12 மீட்டர் உயரம் வளரும். இதன் வேர்கள், நிலத்தில் அதிக ஆழம் போகாமல், செடியைச் சுற்றிப் பூமியின் மேல் படர் கின்றன. அதனால் அதிகமான பரப்பிலி ருந்து அங்கு விழும் மழை நீரை உறிஞ்சித் தண்டில் சேமித்து வைத்துக் கொள் கின்றது.




பாலை வனங்களில், ஐரிஸ், குரோக்கஸ், ஆமரில்லிஸ் குடும்பங்களைச் சேர்ந்த செடிகள், உணவுப் பொருள் களைப் பூமிக்கு அடியில் கிழங்குகளின் வடிவில் சேமித்து வைத்துக் கொண்டு, மழை இல்லாத காலங் களில் பயன்படுத்திப் பல காலம் வாழ்கின்றன!

இந்தச் சப்பாத்திக்கள்ளி, எந்த இடத்திலும் நெருக்கமாக வளர்வதில்லை. நன்றாக வளர்ந்த செடிகளின் வேர்களிலிருந்து ஒருவித நச்சுத் திரவம் சுரந்து, அருகில் வளரும் அதே இனத்தைச் சேர்ந்த சிறிய செடிகளைக் கொன்று விடுகிறது! நீரின் பற்றாக்குறை வராமல் இருக்க இயற்கையின் அமைப்பு இது!





பாலைவனத்தில் வளரும் 'காக்டஸ்' என்னும் கள்ளிச் செடிகள் ஒரு தடவை தாம் உறிஞ்சிய நீரைக் கொண்டு 200 ஆண்டு களுக்கும் மேலாக வாழ்கின்றன. இதன் வளர்ச்சி, ஓர் ஆண்டுக்கு 2 மி.மீ. தான்! இது 15 மீ. உயரம் வளரும்!



பாலை வனத்தில் 'ஜெரிச்சோ' என்னும் தாவரம் வளர்கிறது. வறண்ட காலத்தில் இதன் விதை முற்றியவுடன் இலைகளெல்லாம் உதிர்ந்து கிளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு விதைகளை மூடிக் கொண்டிருக்கும். போதுமான மழை பெய்தவுடன்தான் கிளைகளைப் பிரித்து விதைகளை முளைக்க அனுமதிக்கும்!

'கரா-கும்' பாலை வனத்தில் முலாம் பழங்கள் நன்றாக விளைகின்றன. அவற்றிற்குத் தண்ணீர் விட வேண் டியதில்லை. நீர் ஊற்றுக்களே அங்கே கிடையாது. காரா-போகாஸ்-கோல் வளைகுடாவிலிருந்து வீசும் காற்றின் ஈரப் பசையே முலாம் பழங்களை வளரச் செய்கிறது.






பாலைவனத்தில் உயிரினங்களால் எப்படி வாழமுடிகிறது? காற்றிலிருந்து நீரைப் பெறுவது, மணலிலும் கற்களிலும் மிக நுண்ணிய அளவில் நீரைக் காண்பது, உடலில் உள்ள கொழுப்புச் சத்தின் மூலம் உடலுக்குள் நீரை உற்பத்திச் செய்து கொள்வது, உயிர் வாழத் தகுதியான இடம் இல்லை என்றாலும் எவ்விதத் துன்பங்களையும் பொறுத்துக்கொள்வது.


பாலைவனத்தின் மண்ணில் நுண்ணுயிரிகளும் வாழ்கின்றன. ஒரு தேக்கரண்டி மண்ணில் சுமார் 90,000 நுண்ணுயிரிகள் வாழ்வதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.






பாலைவன உயிரினங்கள் வறட்சியில் எப்படி வாழ்கின்றன? சில உயிரினங்கள் நிலத்தைத் தோண்டிக் கொண்டே போய், நீர் இருக்கும் இடத்திற்குச் சென்று விடுகின்றன. மற்றவை, மழை மீண்டும் பெய்யும் வரை அசைவற்ற ஒரு நிலையை அடைகின்றன!

இங்கு வாழும் கறையான்கள், பூமியில் நீரை நோக்கி 30 மீட்டர் ஆழம் வரை உள்ளே தோண்டிச் செல்கின்றன!







பாலைவனத்தில் சில இடங்களில் தேங்கி நிற்கும் மழைநீரில் 'பிரைன் ஷ்ரிம்ப்பு' என்னும் ஒருவித இறால்கள் வாழ்கின்றன. ஆண்டுக் கணக்கில் மழையே இல்லாவிட்டாலும் கூட, இவற்றின் முட்டைகள் சாவதில்லை! ஷ்ரிம்ப்புகள் 15 ஆண்டு காலம் நீர் இல்லாத இடத்திலும் கூட தங்கள் உயிரை இழக்காமல் இருக்கின்றன. ஆனால் போதிய நீர் கிடைத்தவுடன் மளமளவென்று உயிர்த்து வளரத் தொடங்கி விடுகின்றன!



ஆஸ்திரேலியப் பாலைவனங்களில் 'மோலோக்' என்னும் பல்லிகள் வாழ்கின்றன. இந்தப் பல்லியின் உடல் முழுவதும் கூர்மையான புடைப்புகளால் போர்த்தப்பட்டுள்ளது. இவற்றில் ஏராளமான துளைகள் இருக்கின்றன. இந்தப் பல்லியின் மேல் விழும் ஒவ்வொரு துளி நீரும், துளைகளில் சேமித்து வைக்கப்படுகிறது. அந்த நீர், அதன் வாயின் ஓரத்தில் சொட்டு சொட்டாகச் செல்லும்படியான அமைப்பு உள்ளது. நீர் தேவைப்படும் போது, பல்லி தாடையை அசைத்தால் நீர் கிடைத்து விடும்!

பாலைவனப் பிராணியான ஒட்டகத்தின் முதுகில் உள்ள திமிலில் கொழுப்பு சேமித்து வைக்கப்படுகிறது. தண்ணீர் கிடைக்காத போது, திமிலில் உள்ள கொழுப்பின் மூலம் தனக்குத் தேவையான தண்ணீரை உற்பத்தி செய்து கொள்கிறது. எதையும் சாப்பிடாமலும், நீர் இல்லாமலும், வேலை செய்து கொண்டும் ஓர் ஒட்டகம் 45 நாட்களுக்குக் கூட சமாளித்துக் கொள்ளும்!






ஆஸ்திரேலியப் பாலைவனங்களில் வாழும் தவளைகள், நீர் கிடைக்கும் போதெல்லாம், தன் தொண்டைக்குக் கீழே உள்ள பைக்குள்ளும் உடலிலும் நிரப்பிக் கொள்ளும். எனவே, இவை வறண்ட காலங்களிலும் இந்த நீரைப் பயன்படுத்தி உயிர் வாழ்கின்றன!

பாலைவனத்தில் உள்ள 'கங்காரு எலிகள்' தண்ணீர் குடிப்பதே யில்லை! உலர்ந்த விதைகளைத்தான் தின்னும்! இதன் வாய்க்குள் உரோமங்கள் வளர்ந்திருக்கின்றன. விதைகளை வாய்க்குள் அடக்கிக்கொண்டு உமிழ்நீரால் ஊறவைத்துத் தின்கிறது. 3 ஆண்டுகள் கூட இந்த எலி தண்ணீர் குடிக்காமல் இருந்து விடும்!



காஞ்சிக்கும் காசிக்கும் இடையில்





இது என்ன வகுப்பு?


எங்கள் வகுப்பிற்கு அறிவியலுக்கும் ஆங்கிலத்துக்கும் ஒரே ஆசிரியர். அன்று இரண்டு பாட வேளையும் அடுத்தடுத்து இருந்ததால் அவரே தொடர்ந்து பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது கடைசி வரிசையில் ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி "ஏன் தூங்கறே?" என்று கேட்டார். உடனே அவன் "சார்! நான் தூங்கவே இல்லை" என்று சாதித்தான். "சரி! இப்ப நான் எதைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தேன் சொல்?" என்றார் ஆசிரியர். அவன் முதல் பாட வேளையில் நடத்திய அறிவியல் பாடத்தைப் பற்றிக் கூறவும் அனைவரும் சிரித்தோம். உடனே இது ஆங்கில வகுப்பு என்பதை அறிந்த மாணவன் ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டான்.

– ம. பவானி,
மாப்படுகை, மயிலாடுதுறை.


வந்தே மாதரம்!

சமூக அறிவியல் பாடம் நடத்தி முடித்தார் ஆசிரியர். பிறகு முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். "வந்தே மாதரத்தை முழங்கியவர் யார்?" என்று கேட்டார் ஒரு மாணவனிடம். அவன் வேகமாக எழுந்து "ஏ.ஆர். ரகுமான்" என்றான். நாங்கள் அனைவரும் சிரித்தோம். "சார்! எங்க வீட்ல கேஸட் கூட வச்சிருக்கேன். எனக்கு நல்லா தெரியும் ரகுமான் தான்!" என்றான் மீண்டும். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. "நேற்று பள்ளிக் கூடத்துல பாடம் நடத்தும் போது என்ன செய்திட்டிருந்தே?" என்று கேட்டார். "நேற்று நான் லீவு சார்!" என்றான். ஆசிரியர் அவனை மன்னித்து விட்டு விட்டார்!

– கே. பிரபு,
ஜனக்புரி, புதுதில்லி




என்ன இருக்கும்?



படிப்பாயா?

எங்கள் வகுப்பிற்கு புதிதாக ஒரு பெண் வந்து சேர்ந்தாள். அந்த மாதத் தேர்வில் மிகவும் குறைந்த மதிப்பெண்களை அவள் எடுத்திருந்தாள். ஆசிரியை அவளிடம் "நீ நல்லா படிக்க மாட்டியா?" என்று கேட்டார். "டீச்சர்! நான் நல்லா படிப்பேன். எங்க கிராமத்துப் பள்ளியில் நான் பதிமூன்றாவது ரேங்க் வாங்குவேன்" என்றாள். ஆசிரியை வியந்தார். "சரி! உங்க வகுப்பில் எத்தனை பேர்?" என்று கேட்டார். "பதிமூணு பேர் தான்" என்றவுடன் வகுப்பே சிரித்தது!

– சி. இ. இராஜராஜேஸ்வரி,
ஆறாம் வகுப்பு, 'அ' பிரிவு, அ.ம.மே. பள்ளி, ஆண்டிபட்டி.



இடையில் என்ன?


உணவு இடைவேளை. எல்லோரும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். திடீரென என் நண்பன் "காஞ்சிக்கும் காசிக்கும் இடையில் என்ன இருக்கும்?" என்று கேட்டான். நாங்கள் ஒவ்வொருவரும் ஆறு, காடு, ஊர், மலை என்று ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டு வந்தோம். எதுவும் இல்லையென்று கூறி விட்டான். நான் பொறுமை இழந்து "என்னதான் இருக்கு? நீயே சொல்லேன்" என்றேன். அவன் சிரித்துக் கொண்டே "காஞ்சிக்கும் 'காசி'க்கும் இடையில் 'ஞ்'தான் இருக்கும்" என்றானே பார்க்கலாம்!

– சி. ராஜசேகரன்,
ராஜபாளையம்.

என்ன தெரியுது?

ஆசிரியை பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் இன்னொரு மாணவனையே பார்த்துக் கொண்டு, பாடத்தைக் கவனிக்காமல் இருந்தான். அதைக் கவனித்த ஆசிரியை "அவன் முகத்திலேயா போர்டு தெரியுது?" என்று கோபமாகக் கேட்டார். உடனே அவன் "இல்லைங்க டீச்சர், பல்லுதான் தெரியுது" என்றான். நாங்கள் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டோம். ஆசிரியை அவனை வகுப்பில் நிற்க வைத்து விட்டார்.

– பா. கவிதா,
ஒன்பதாம் வகுப்பு,
ஷ்ரைன் வேளாங்கன்னி பள்ளி, தி. நகர்,
சென்னை.



சுந்தரி மிகுந்த அழகி. அவளைத் திருமணம் செய்து கொள்ள அவளது தூரத்து உறவினர்களான அண்ணாசாமியும், மன்னார்சாமியும் போட்டியிட்டனர்.

சுந்தரியின் தந்தை சுப்புசாமி இருவருக்கும் ஒரு பந்தயம் வைத்தார். சுப்புசாமியின் தாயார் கிராமத்தில் நில புலன்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். மிகவும் கெட்டிக்காரி. சுலபத்தில் யாரையும் நம்ப மாட்டார். ''அவரிடம் விலையுயர்ந்த வைர அட்டிகை ஒன்றிருக்கிறது. அவரை மிரட்டாமல், அவர் உடம்பில் சிறு காயம் கூட ஏற்படுத்தாமல், அவருக்குத் தெரியாமல் அதை எடுத்து வர வேண்டும். இந்தப் போட்டியில் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டால் இருவருக்கும் பெண் கிடையாது'' என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

இருவரும் சம்மதித்து சுந்தரியின் பாட்டி இருந்த கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தனர். பாட்டியின் நன்மதிப்பைப் பெற்று வேலைக்கும் சேர்ந்தனர்.

முதல் நாள் ஆடு, மாடுகளை ஓட்டிப் போய் மேய்த்தான் மன்னார்சாமி. அன்று பூராவும் ஏற்றம் இறைத்து, களை பிடுங்கி தோட்ட வேலை செய்தான் அண்ணாசாமி.

இரவில் இருவரும் தனிமையில் சந்தித்த போது "மன்னாரு! உன் வேலை எப்படி இருந்தது?" என்று கேட்டான் அண்ணாசாமி.

"ரொம்ப ஜாலியா இருந்தது. ஆடு மாடுக புல் தேடி மேய்ஞ்சுட்டு வரும். நான் மர நிழலிலே படுத்துத் தூங்குவேன். மதியம் ஒரு தடவை குளத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போய் தண்ணீர் குடிக்க விடுவேன். பொழுது சாயறப்போ 'பா, பா'ன்னு குரல் கொடுத்தா எல்லாம் வந்துடும். அவ்வளவுதான்! ரொம்பக் கஷ்டமில்லாத வேலை!" என்றான் மன்னார்சாமி.

"ஆமாம்! இதென்ன ரத்தக் காயம்?" என்று கேட்டான் அண்ணாசாமி.

"இதுவா! கொழுப்பு... ஒரு மரத்திலே மாங்காய் பெரிசு பெரிசா இருந்ததா? ஏறினேன். கால் தவறி விழுந்துட்டேன்! ஆமாம் உன் வேலை எப்படி?"

என் வேலை சுலபம், உன் வேலை எப்படி?



என்று கேட்டான் மன்னார்சாமி.

“இது அதை விட சுலபம். நாலு சால் பாடிக்கிட்டே தண்ணீர் இறைச்சேன். அப்புறம் சாப்பிட்டேன். நிழல் வந்தப்புறம் களை புடுங்கினேன். அவ்வளவுதான் வேலை” என்றான்.

சிறிது நேர மௌனத்திற்குப் பின் “நாளைக்கு நாம வேலையை மாத்திக்கிட்டா என்ன?” என்று கேட்டான் மன்னார்சாமி.



“நான் நெனைச்சேன்; நீ சொல்லிட்டே” என்று மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான் அண்ணாசாமி.

பாட்டியிடம் சொல்லிவிட்டு மறுநாள் இருவரும் வேலையை மாற்றிக் கொண்டனர்.

“இந்த வேலையையா சுலபம் என்று கதையளந்தான்! கிங்கரி மாதிரி நாற்காலியில் உட்கார்ந்து கண்காணிக்கிறார் பாட்டி! ஏற்றம் இறைத்து, இறைத்து உள்ளங்கை எரிகிறது! கால் உளைகிறது. போதும் என்ற வார்த்தையே பாட்டி வாயில் வர மாட்டேங்குதே! ‘இன்னும் களை பிடுங்கணும்; பூச்சி மருந்தடிக்கணும். இவ்வளவு மெதுவா செய்தா எப்ப முடிப்பே’ என்று விரட்டுகிறார்” என்று பொருமினான் மன்னார்சாமி.

“ஆடோ, மாடோ காணோமின்னு வந்தே, தோலை உரிச்சுடுவேன்” என்று கிளம்பும் போதே கிழவி மிரட்டினார். இது களானா பெண்டு நிமிர்த்துதே! அதிலேயும் அந்தச் செவலை, கிட்டப் போனாலே முட்டுது. இதுக சண்டையை எப்படி விலக்கறது? மணி மூணு இருக்கும் போல... சூரியன் இறங்க ஆரம்பிச்சாச்சே! அந்தக் கறுப்பு மாடு ஓடி வந்த வேகத்துலே டிபன் தூக்கைத் தட்டி சோறெல்லாம் மண்! சிறு குடலைப் பெருங்குடல் திங்குது! மன்னாரு நல்லா ஏமாத்திட்டான். ராத்திரி அவனை நல்லா கேட்கறேன்” என்று கறுவினான் அண்ணாசாமி.

இரவு வந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லிக் கொண்டனர். பிறகு, “சரி; நாம் வந்தது அட்டியலைக் கொண்டு போக! அட்டியல் எங்கே இருக்கும்?” என்றான் அண்ணாசாமி.

“கவனித்தாயா! கிழவி தலையணைக்குப் பதில் பூட்டின ஒரு பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுக்கிறார். அதில் விலையுயர்ந்த நகைகள் இருக்க வேண்டும். அட்டிகையும் அதில்தான் இருக்கும்” என்றான் மன்னார்சாமி.

“அப்படியெல்லாம் குருட்டுக் கணக்குப் போட்டு ஏமாற நான் தயாரில்லை! பூட்டை உடைத்துப் பார்த்து விட வேண்டும்.”

"எப்படி? பாட்டி சின்ன ஓசைக்கும் திரும்பிப் படுக்கிறாரே!"

'நாளை பாட்டியின் சாப்பாட்டில் மயக்க மருந்தை கலந்து விட வேண்டும்' என்று தீர்மானித்த பின் இருவரும் உறங்கினர்.

மாடு மேய்க்கப் போன அண்ணாசாமி மயக்க மருந்து வாங்கி வந்தான். தக்க நேரத்தில் சாப்பாட்டில் அதைக் கலந்தான் மன்னார்சாமி.

பெட்டியை வெளியே கொண்டு வந்து உடைத்துப் பார்த்தனர். அத்தனையும் கண்ணைப் பறிக்கும் தங்க, வைர நகைகள்!

அந்தச் சமயம் அங்கே வந்தாள் சமையல்காரி செண்பகம். இருவரும் திகைத்தனர்.

"அண்ணே! பயப்படாதீங்க! நான் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இன்னைக்கு ஓடினீங்கனா மாட்டிக்குவீங்க! எல்லையிலே காளி பூஜை நடக்குது. நாளைக்கு ஓடுங்க. இன்னைக்குப் பெட்டியைப் பூட்டி வைச்சுடுங்க" என்று யோசனை சொன்னாள்.

'நல்ல யோசனை' என்று இருவரும் செண்பகத்தைப் பாராட்டினர். அதன்படி பெட்டியைப் பூட்டி பாட்டியின் தலைக்கடியில் வைத்து விட்டுப் படுத்து உறங்கினர்.

மறுநாள் இரவு செண்பகமே பெட்டியை எடுத்து வந்து தர இருவரும் அதை மாறி மாறி சுமந்து கொண்டு ஊர் எல்லையைக் கடந்தனர்.

"வைர அட்டிகையை நீ எடுத்துக் கொண்டு சுந்தரியை மணந்து கொள். எனக்கு மீதி நகை போதும்" என்றான் அண்ணாசாமி.

"ஓஹோ! என்னை மடையன் என்று எண்ணிக் கொண்டாயா? நீயே சுந்தரியை மணந்து கொள். எனக்கு அட்டிகை நீங்கலாக மற்ற நகைகள் போதும்" என்றான் மன்னார்சாமி.


"சரி. இருவரும் நகைகளைப் பகிர்ந்து கொள்வோம்" என்று பெட்டிப் பூட்டை உடைத்தனர்.

அதில் இருந்தது என்ன தெரியுமா? உடைத்துப் போட்ட செங்கல்கள், எலிக் குஞ்சுகள்; பல்லிகள்; கரப்பான் பூச்சிகள். ஒரு காகிதம். காகிதத்தை எடுத்துப் படித்தனர்!

'அட, திருட்டுத் தடியன்களா! உங்களுக்கா என் பேத்தியைக் கல்யாணம் செய்து தருவேன்? செண்பகம் என் நம்பிக்கைக்குரிய தோழி! அட்டிகையைக் களவாட எவர் மறுக்கிறாரோ அந்த நேர்மையானவரே எங்கள் வீட்டு மாப்பிள்ளை என்று நானும் என் மகன் சுப்புசாமியும் நினைத்திருந்தோம்! சோம்பேறிகளே!' என்று எழுதியிருந்தது!

— மாலதி


● பச்சோந்தி தன் ஒரு கண்ணால் ஓர் இடத்தையும் அதே சமயம் மற்றொரு கண்ணால் வேறு ஓர் இடத்தையும் பார்க்கக் கூடிய இயல்புடையது.





● எகிப்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைதான் நாம் உபயோகிக்கும் குண்டூசிகள். இவர்கள் அன்று வெண்கலத்தில் குண்டூசிகளைத் தயாரித்தார்கள்.

– தேனி முருகேசன்



கோகுலத்துக்கு சந்தா செலுத்திவிட்டீர்களா?

மாதுவும் ஜானுவும் கோகுலத்திற்கு சந்தா செலுத்த எவ்வளவு ஆர்வமாக ஓடி வருகிறார்கள்! இவர்களைப் போல் உங்களுக்கும் கோகுலத்தைப் படிக்க ஆர்வம் இருக்கும். நீங்களும் சந்தா செலுத்தலாமே! அல்லது நீங்கள் ஏற்கெனவே சந்தாதாரராக இருந்தால் உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா செலுத்தலாமே!

பெயர் : ....

முகவரி : ....


....


....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

ஐஸ்கிரீம் உருவானது எப்படி?





கண்ணாடிக் கற்கள்



தொழிற்சாலையிலிருந்து வெளி வரும் கழிவு மண்ணை சேகரித்து கடும் வெப்பத்தைச் செலுத்தி எரித்தால், அது கண்ணாடியாகி விடுகிறது. இது ஸ்பிரிட் என அழைக்கப்படுகிறது. இதை கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தலாம் அல்லது இதைக் கொண்டு ஓடு போன்ற பொருளைத் தயார் செய்யலாம்.

கண்ணாடித் தொழிலுக்குப் புகழ் பெற்ற பெல்ஜிய நாட்டில் நடந்த பரிசோதனையில் இவ்விதம் குப்பை மேட்டு மண்ணானது கண்ணாடியாக மாற்றப்பட்டுள்ளது.

இப்போது மற்ற நாடுகளும் இம்முறையைப் பின் பற்றி கண்ணாடிக் கற்கள் தயாரிக்க ஆரம்பித்துள்ளன.


சுறாமீன்

கடல் வாழ் உயிரின நிபுணர்கள் இப்போது அதிசய சுறா மீன் ஒன்றை ஆராய்ந்து வருகின்றனர். கலிபோர்னியாவில் டானா பாயிண்ட் என்னும் இடத்துக்கு அருகே கடலில் ஒரு மீனவரின் வலையில் சிக்கிய இந்தச் சுறா மீனின் நீளம் 4.5 மீட்டர். மீனின் எடை 900 கிலோ.


இந்தச் சுறாமீன் வாயைத் திறந்தால் அதன் வாயின் குறுக்களவு 60 செ. மீட்டர் அளவு இருந்தது. எனவே இதை அண்ட வாய் சுறா என்று அழைக்கின்றனர். இதைவிட முக்கியமான செய்தி, இந்தச் சுறாமீன் வாயைத் திறந்தால் வாயின் உட்புறம் ஒளி தெரிவதாகக் கூறப்படுகிறது. சுறா பிடிக்கும்போது உயிருடன் இருந்ததால் இதை லாஸ் ஏஞ்சல்ஸில் இயற்கை வரலாற்று மியூஸியத்தில் நீர்த் தொட்டியில் வைத்திருக்கிறார்கள்.

உறங்கும் எரிமலை

துருக்கியில் உள்ள பனிமூடிய அரோராட் என்னும் மலை உள்ளுக்குள் எரிமலையாகக் குமுறிக் கொண்டு இருக்கிறதாம்!



இதன் சுற்றுப்புறங்கள் எல்லாம் ஒரு காலத்தில் இந்த எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட 'லாவா' என்ற எரிமலைக் குழம்பால் இன்று வளமான பூமியாக மாறியுள்ளன. இன்று பனி மூடி அமைதியாக இம்மலை காணப்பட்டாலும் இதைப் பனி மலை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவதில்லை. உறங்கிக் கொண்டிருக்கும் எரிமலை என்றே கூறுகிறார்கள்.



தான் விழுங்கி மீன்

சியாஸ் மோடன் என்னும் மீன் உருவத்தில் தன்னைவிட பெரிய மீன்களை விழுங்கி விடும். இதற்கு வசதியாக பெரிய இரைப்பை அமைந்துள்ளது.

— ஆர். ஆர். பூபதி.

ஐஸ்கிரீம்!

முதன்முதலாக ஐஸ்கிரீம் கண்டுபிடிக்கப்பட்டபோது அரச பரம்பரையினர் மட்டுமே ருசித்துச் சாப்பிடும் உணவாகக் கருதப்பட்டது. 13–ஆம் நூற்றாண்டில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஐஸ்கிரீமை மங்கோலிய அரசன் குப்லாய்கான் காலத்தில் வெளியில் யாரும் தயாரிக்கக் கூடாது



என்று தடை விதித்திருந்தார்கள்!

இத்தாலியப் பயணியான மார்க்கோ போலோ சீனாவிற்கு வந்து அரண்மனையில் தங்கியிருந்த சமயம் அந்த ரகசியத்தை அறிந்து கொண்டு போய் இத்தாலிய அரச சபையில் வெளியிட்டார். 1500 ஆம் வருடம் வரை அந்த ரகசியத்தைக் காப்பாற்றி வந்தவர்கள் பிரான்ஸ் நீதிமன்றம் மூலம் அனுமதி பெற்று வெளியிட, உலகமெங்கும் ஐஸ்கிரீம் செய்முறை பரவியது.

– எம். சகிலாபானு


படவ்க் மரம்!

மழை வருமா, வராதா என்று முன் கூட்டியே அறிந்து கொள்ள ஒரு மரம் இருக்



கிறது. அந்த மரத்தின் பெயர் படவ்க். இது பர்மிய நாட்டில் நிறைய காணப்படுகிறது. இந்த மரத்தின் பூ பொன்னிறமாக இருக்கும். இது மூன்று முறை பூ விட்டு விட்டால் நாட்டில் பருவ மழை தொடங்கி விடுமாம். இதனால், பர்மாக்காரர்கள் இந்த மரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கின்றனர்!

பொது அறிவு புதையல் நூலிலிருந்து
ஆர். மகாதேவன்



கூர்மையான பார்வை!

சாதாரண கழுகுகளுக்குக் கூரிய பார்வை சக்தி உண்டு. கெஸ்டரல் என்று ஒரு சிறிய கழுகு இனம் இருக்கிறது. இந்தக் கழுகு 60 அடி உயரத்தில் பறக்கும்போதே, தரையில் உள்ள சிறு புழு பூச்சிகளைப் பார்த்து விடும்.

– எம். சகிலா பானு




முதல் அச்சு நூல்

இந்திய மொழிகளில் தமிழிலேயே அச்சு நூல் முதலில் வெளிவந்தது; முதல் அகராதி வெளி வந்ததும் தமிழில்தான். 1679-இல் தமிழ் – போர்ச்சுக்கீசிய அகராதி அண்டர் டி டிரொயன்கா என்ற பாதிரியாரால் வெளியிடப்பட்டது. 1706–இல் தரங்கம்பாடிக்கு வந்த பார்த்தலோமியஸ்ஜீகன் பெய்க்கு என்ற ஜெர்மானியர் சேர்த்திருந்த குறிப்புக் களைப் பயன்படுத்தி பப்ரீசியஸ் என்ற ஜெர்மானியர் 1719–இல் தமிழ்– ஆங்கில அகராதியை உருவாக்கினார்.

ஆதாரம்: சோமலெ எழுதிய வளரும் தமிழ் என்னும் நூல்.

– எல். கோபால கிருஷ்ணன்




உயரமான கலங்கரை விளக்கம்!

உலகிலேயே மிக உயரமான கலங்கரை விளக்கம் ஜப்பான் நாட்டிலுள்ளது. இதன் உயரம் 348 அடிகளாகும். இது எஃகு கலங்கரை விளக்கமாகும். ஆறு லட்சம் மெழுகுவர்த்திகள் எரிந்தால் எந்த அளவுக்கு வெளிச்சம் தெரியுமோ அந்த அளவிற்கு வெளிச்சம் இந்தக் கலங்கரை விளக்கத்திலிருந்து வெளிவரும். இந்த ஒளி 32 கி.மீ தூரம் வரை தெரியும்.

ஆதாரம்: வியத்தகு அறிவியல்

தகவல்: நெ. இராமன்

உலகில் சுமார் 5000 மொழிகள் பேசப்படுகின்றன.



• லியானார்டோ – டா – வின்சி, மோனோலிசா ஓவியத்தை வரைந்து முடிப்பதற்கு 3 ஆண்டுகள் பிடித்தன.

• ஆமைகள் 300 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

– ஆர்.வி. மயில்வாகனன்



அடுத்த இதழில்
நித்யாவும் சத்யாவும் எதைக் கண்டு இப்படி திகைத்து நிற்கிறார்கள்?
வாண்டு மாமா எழுதும்
தங்கச் சிலை!
திகில் திருப்பங்கள் நிறைந்த புதிய தொடர்கதை ஆரம்பம்!
ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்பொழுதே உங்கள் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.

இவ்வளவு விரைவில்....

'மின்கல மாதவன்' தொடர்கதை அடுத்த இதழில் முடியும் என்ற அறிவிப்பைப் பார்த்ததும் அதிர்ந்தேன். விறுவிறுப்பான கதை இவ்வளவு சீக்கிரத்தில் முடிகிறதே!

– கா. மாதங்கி,
ஒன்பதாம் வகுப்பு,
மயிலாடுதுறை.

விடுமுறை ஸ்பெஷல் அசத்தியது!

எதிர்பார்த்தேன்!

விடுமுறை ஸ்பெஷலாக கோகுலம் வரும் என்று எதிர்பார்த்தேன். அதே போல் வீட்டில் செய்து பார்த்து மகிழும் வண்ணம் பல வற்றை அளித்து அசத்தி விட்டீர்கள்! காகிதத்தில் பூ செய்து பார்த்தேன். நன்றாக வந்தது. என் தோழிகளுக்கும் கற்றுத் தந்தேன்.

– வசுமதி,
ஆறாம் வகுப்பு, நகர மேல்
நிலைப்பள்ளி, கும்பகோணம்.

எக்ஸ்பிரஸ்!

அட்டையில் விடுமுறை எக்ஸ்பிரஸ் என்று குறிப்பிட்டு விட்டு, ரயில் ஓடாமல் நிற்கிறதே! என்று நினைத்தேன். உள்ளே படித்துப் பார்த்ததும் தான் புரிந்தது. விடு முறை ஸ்பெஷல் எக்ஸ்பிரஸ் வேகத்தில் இருந்தது!

– செ. சரவணக்குமார்,
சாத்தூர்.

ஸ்வீட் தருவேன்!

உலகக் கோப்பை கிரிக்கெட்டில் கோப்பை வாங்கிய ஐந்து கிரிக்கெட் வீரர்களையும் போட்டு எங்களை மகிழ்ச்சிப் படுத்திவிட்டீர்கள். உலகக் கோப்பை துவங்கும் நேரத்தில் விளையாட்டுச் செய்திகள் மிகவும் உபயோகமாக இருக்கின்றன. உலகக் கோப்பையை நம் நாடு வென்றால் உங்களுக்கு ஸ்வீட் வாங்கித் தருவேன்.

– என். பிரசன்னா,
பத்தாம் வகுப்பு, ஈரோடு.

சுவாரசியம்....

'நீங்களும் மாஜிக் செய்யலாம்!' மிகவும் எளிமையாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. தொடர்ந்து வெளியிடுவீர்களா?

– கே. வஹிதா,
தூத்துக்குடி.

பொழுது போகும்!

நான் இதுவரை வெள்ளை முயல்களை மட்டுமே பார்த்திருக்கிறேன். பல வண்ணங்களில் முயல்கள் பார்க்க அழகாக இருந்தன. முயல் வளர்க்க ரொம்ப ஆசையாக இருக்கிறது. அப்பாவிடம் கேட்டிருக்கிறேன். வாங்கித் தந்தால் விடுமுறையில் நன்றாகப் பொழுது போகும்!



– பிரசாத் குமார்,
ராணிப்பேட்டை.

இவ்வளவுதானா?

எட்டு லேபில்கள் தான் கொடுத்திருக்கிறீர்கள். எனக்கு நோட்டு புத்தகங்கள் அதிகம். மீதி புத்தகங்களுக்கு லேபில் வேண்டுமே! என்ன செய்வது?

– எஸ். ப்ரீத்தி, சென்னை.

ப்ரீத்தி, கவலைப்படாதீர்கள்! இந்த இதழிலும் லேபில்கள் உண்டு.


(–ஆர்)

சிரிப்பு வருகிறது

விடுமுறைக்காக நான்கு படக் கதைகளா! ஒவ்வொரு படக் கதையும் ஒவ்வொரு கருத்தைக் கூறியது. 'இது என்ன கணக்கு?' படக்கதையை நினைத்தாலே சிரிப்பு வருகிறது.

– பி. பாஸ்கரன்,
காரைக்குடி.

8. மாது எடுத்த முடிவு!



மின்கல மாதவன்!

ரேவதி

கீதா தனது திட்டத்தை விளக்கினாள்.

"எப்படி எங்க அப்பா, தந்திரமாக உங்க பெற்றோரைக் கொண்டு வந்து உங்களை வரவழைக்கச் சதித்திட்டம் போட்டிருக்கிறாரோ, அதேமாதிரி நீங்களும் என்னை மறைச்சு வைச்சு, உங்க பெற்றோரை விடுவித்தால்தான் என்னை விடுவிக்க முடியும்னு நிபந்தனை போட்டு அவரைப் பணிய வைச்சு காரியத்தை சாதிச்சுக்க முடியும்."

"திட்டம் நல்ல திட்டம்தான். கண்டிப்பாக வெற்றி தரும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் உன்னை என்னால் எங்கே கீதா மறைச்சு வைக்க முடியும்? எங்க வீட்டு சாவிகூட என்னிடம் இல்லையே!" என்றான் மாது பரிதாபமாக.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம் மாது. கீதா என் வீட்டில் இருக்கட்டும். என் வீடு உங்க வீட்டை விடப் பாதுகாப்பானது" என்றார் விசுவநாதன்.

"சார், பூபதி போலீசுக்குத் தகவல் தர மாட்டார் என்பது என்ன நிச்சயம்? அப்படிக் கொடுத்தால் எனக்கு உதவி செய்ய வந்து நீங்களும் வம்பில் சிக்கிக் கொள்வீர்களே?" - கேட்டது மாதவன்.

"நியாயமான சந்தேகம்தான் மாது. ஆனால், பூபதி கண்டிப்பாகப் போலீசுக்குப் போக மாட்டார். காரணம் அவர் பண்ணுவது சட்ட விரோதமான; நாட்டுக்குத் துரோகமான செயல். அதோடு அவர் உன் பெற்றோர்களை வேறு கடத்தியிருக்கிறார். அதனால் கண்டிப்பாக அவர் போலீசுக்குப் போக மாட்டார்" என்றார் விசுவநாதன் உறுதியாக.

கார் விசுவநாதனின் வீட்டுக்கு வந்தது. கீதாவைத் தன்னுடைய அறையிலேயே வசதியாகத் தங்க வைத்துக்கொண்டார் விசுவநாதனின் மனைவி. அங்கிருந்தே கீதா, பூபதிக்குப் போன் செய்தாள். பூபதியே எடுத்தார்.

"அப்பா, என்னை மாதவனின் ஆட்கள் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். பள்ளிக்குப் போகும் வழியில்தான். என்னால் கூச்சல் கூடப் போடமுடியவில்லை. இங்கே வந்த பிறகுதான் இதெல்லாம் மாதவனின் ஆட்கள் செய்த வேலைன்னு தெரிஞ்சது. அப்பா... நீங்க மாதவனோட அப்பா அம்மாவை அடைச்சு வைச்சிருக்கீங்களாமே... அவங்களை அவங்க வீட்டுலேயே



கொண்டு போய் விட்டுட்டா என்னை விடுவிக்கறேன்னு சொல்றாங்கப்பா. எங்கப்பா நல்லவர். இந்த மாதிரியெல்லாம் ஆட்களைப் பிடிச்சு வெச்சுக்க மாட்டார்னு எத்தனை சொன்னாலும் நம்பாமல் சிரிக்கிறாங்கப்பா. ஏம்பா இவங்க சொல்றது உண்மைதானாப்பா? எனக்குப் பயமா இருக்குப்பா'' என்று கீதா அழுத நாடகம் தகுந்த பயனைத் தந்தது.

விசுவநாதன் ஏற்பாடு செய்திருந்த வேவு பார்க்கும் ஆட்கள், அன்று நள்ளிரவே பூபதி தனது காரில் மாதவனின் பெற்றோரை அவர்கள் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டதாகத் தகவல் கூறினார்கள்.

''உன்னுடைய உதவிக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன்'' என்று கலங்கி கீதாவுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தான் மாது. மறுநாள் விசுவநாதன் தனது காரிலேயே மாதுவை அவன் வீட்டுக்கு அழைத்து வந்தார். தன் பெற்றோருக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தான் மாது.

விசுவநாதனுக்கு நன்றி கூறிய மாதுவின் தந்தை, ''ஐயா, நீங்கள் பெரிய விஞ்ஞானி. எங்கள் மாதுவுக்கு என்ன நேர்ந்து விட்டது என்பதைக் கூற முடியுமா?'' என்று கேட்டார் பணிவும் ஆர்வமும் பொங்க. மாதுவின் அம்மாவும் ஆர்வமாக வந்து உட்கார்ந்து கொண்டார். விஞ்ஞானி விசுவநாதன் என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்க மாதுவும் ஆவலாகக் காத்திருந்தான்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு விசுவநாதன் ஆரம்பித்தார்.

''நாளுக்கு நாள் அறிவியல் ஆராய்ச்சி எண்ணிப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு வளர்ந்து வருகிறது. புரியாத புதிராக இருந்தவை ஆராய்ச்சியின் விளைவாக விளக்கம் பெற்று வருகின்றன. இருந்த போதிலும் விஞ்ஞானிகளின் அறிவுக்கும் எட்டாத சில மர்மமான புதிர்கள் இன்னும் விடுவிக்கப் படாமலேயே உள்ளன. அவைகளில் ஒன்றுதான் மனித



மின்கலம் (Human Battery) இவர்களுடைய உடலே மின்சாரத்தை உற்பத்தி செய்யும்கூடமாக இருக்கிறது. இத்தகைய அற்புத சக்தி படைத்தவன்தான் மாது.

"பிளக் வாயிலாக மின்சாரத்தை நாம் பயன்படுத்திக் கொள்வதுபோல் இவர்களுடைய உடம்பில் உற்பத்தியாகும் மின்சாரத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட மின்கல மனிதர்கள் உலகெங்கும் இருந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் சார்லஸ் பார்க்கட் என்ற ரயில்வே தொழிலாளி, அமெரிக்காவில் உள்ள மிசோரியைச் சேர்ந்த ஜென்னி மார்கன் என்ற பெண்மணி, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஏஞ்சலின் போன்ற எண்ணற்றவர்கள் இந்த மாதிரி மனித மின்கலமாக இருந்தவர்கள். நம் நாட்டில்கூட கல்கத்தாவிலே சத்தியப் பிரகாஷ் என்பவர் மனித மின்கலமாக (1985) இருந்திருக்கிறார். இவர்கள் உடலில் எப்படி மின்சாரம் உற்பத்தியாகிறது என்பது புரியாத புதிராக இருக்கிறது."

"ஒவ்வொருவர் உடலிலும் ஒவ்வொரு மாதிரி மின்சாரம் வெளிப்படுகிறது. விஞ்ஞானிகளுக்கே இது பெரிய சவாலாக இருக்கிறது. இவர்கள் வரிசையைச் சேர்ந்தவன்தான் மாது. அவன் இதுவரை நாம் கண்டறியாத ஒரு புதிர். அதனால்தான் நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. மாதுவின் உடலில் ஏராளமான காந்தசக்தி சுழன்று கொண்டே இருக்கிறது. அதன் விளைவாக அவன் இரு கைகளையும் இணைக்கும்போது மின்சாரமாக மாறி முழு அளவில் வெளிப்படுகிறது. மின்சாரம் எப்படி உற்பத்தியாகிறது என்பதற்கு ஒரு வழிமுறை இருக்கிறது. அதெல்லாம் மாதுவின் விஷயத்தில் தவிடுபொடி!"


விசுவநாதன் மேலும் என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்க எல்லோரும் ஆவலாக இருந்தனர்.

"மாது பள்ளியில் நின்றுபோன மின் இணைப்புக்கு உயிர் கொடுத்தது இந்த சக்தியைக் கொண்டுதான். இதே சக்தியால்தான் கற்பூரத்தை எரிய வைத்தான். பழரசக் கடையில் மிக்சியை இயங்க வைத்தான்! வீட்டில் பல்பை ஒளிர வைத்ததும், மின்சார ரயிலை ஓட வைத்ததும் மந்திரவாதியிடம் இருந்து தப்பியதும்கூட இந்த மனித மின்கல சக்தியைக் கொண்டே! ரௌடிகள் அவனைப் பயன்படுத்தி பாமர மக்களை ஏமாற்ற பால சித்தர் ஆக்கினார்கள். சமூக விரோதியான பூபதி இவன் வெளியிடும் மின்சாரத்தைப் பயன்படுத்தி அச்சு இயந்திரத்தையே இயங்க வைத்து கள்ள நோட்டு அச்சடித்திருக்கிறான்."

"இப்பொழுது மாது, பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்ய வாய்ப்புத் தரக்கூடிய சோதனைக் கூடம்! இந்த சோதனையால் மனித குலத்திற்குப் பயன்தரக்கூடிய பல உண்மைகள் கண்டறியப் படலாம். மருத்துவத் துறைக்கும், வேதியியல் துறைக்கும் இவன் புதிய கண்டு பிடிப்புகளைத் தர முடியும். மாதுவைப் பற்றி பத்திரிகைகளுக்கு சில கட்டுரைகளை எழுத இருக்கிறேன்" என்று முடித்தார் விசுவநாதன்.



அடுத்த ஒரு வாரத்தில் விசுவநாதன் மாதுவின் மின் உற்பத்தி ஆற்றலை



"எங்கேடா வேகமாப் போறே...?"

"மகுடி இசை கேட்டு சலிச்சுப் போச்சும்மா... பாப் மியூசிக் கத்துக்கப் போறேன்!"

— நெற்குப்பை கி. மனோகரன்

வெளிப்படுத்தி நாளேடுகளில் எழுதிய கட்டுரைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. தூர்தர்ஷன், தனியார் டீ.வி, வெளிநாட்டு டீ.வி என்று மாதுவைப் பேட்டி காணப் பத்திரிகையாளர் கூட்டம் அலை மோதியது. சில அயல்நாட்டுப் பத்திரிகைகள் தனி சிறப்பு இணைப்புகளை வெளியிட்டன. அவனைப் பரிசோதிக்க அயல்நாட்டு விஞ்ஞானிகள் வந்தனர்.

"தண்டனையை அனுபவிக்க பூபதி சிறைக்குப் போய் விட்டதால் கீதா அனாதையாகி விட்டாள். அவளுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும். அவள் உதவாவிட்டால் நான் இல்லை" என்று கண்ணீர் விட்டான் மாது. "இந்தக் கவலையே உனக்கு வேண்டாம். கீதா இனி என் மகள்" என்றார் விசுவநாதன்.

அன்று மாலை மாதுவைத் தேடி வந்த விசுவநாதன், "மாது ஒரு மகிழ்ச்சியான செய்தி. உன்னை வைத்து ஆராய நம் நாட்டின் மிகப் பெரிய தொழில் நிறுவனத்தார் முதல் கட்டமாக ஐம்பது லட்சம் ரூபாய் அறக்கட்டளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உன்னைப் பற்றிக் கண்டறியப்படும் பல உண்மைகள் நமது நாட்டுக்கே பயன்படப் போகின்றன" என்றார்.

ஒரு வாரம் பொறுத்து மாதுவைப் பரிசோதிக்க அமெரிக்காவில் இருந்து விஞ்ஞானிகள் வந்தனர். சில அடிப்படை பரிசோதனைகளை முடித்துக்கொண்ட அவர்கள், "மாது, நீ நவீன ஆராய்ச்சிகள் பலவற்றிற்கு இடமளிக்க வல்ல அற்புதமான மனித பரிசோதனைக்கூடம். எங்கள் பல்கலைக்கழகம் உன்னைத் தத்தெடுத்துக்கொண்டு அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறது. உன் பெற்றோர்களுக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடையாகத் தருகிறோம். விரும்பினால் அவர்களும் உன்னுடன் அமெரிக்காவில் வந்து வசிக்கலாம். எல்லா வசதிகளும் செய்து தருகிறோம்?" என்றனர்.

"மாது, இது மிக அரிய வாய்ப்புப்பா. நழுவ விட்டு விடாதே. ஏற்றுக் கொள்" என்று அப்பா கூறினார்.

"சரின்னு சொல்லுப்பா. நமக்கு விடிவு காலம் வந்துவிட்டது" என்றார் அம்மா.

அம்மா, அப்பா, அமெரிக்க விஞ்ஞானிகள் எல்லோரும் மாது என்ன பதில் கூறப் போகிறான் என்பதைக் கேட்க ஆவலாகக் காத்திருந்தனர். விஞ்ஞானி விசுவநாதனும் தொழில் அதிபருடன் காத்திருந்தார்.

"அம்மா, அப்பா, அமெரிக்க விஞ்ஞானிகளே, உங்கள் விருப்பத்தை ஏற்க முடியாததற்காக என்னை மன்னியுங்கள். என்னைத் தந்துள்ள தாய்த் திருநாடு இது தான். ஏழ்மை, வறுமை, மூட நம்பிக்கையில் இது உழன்று கொண்டிருந்தாலும், இதுதான் நான் பிறந்த புண்ணியபூமி. என்னை வைத்து ஆராய்ச்சி செய்து கண்டறியப்படும் உண்மைகள் இந்த ஏழை நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்பதே என் விருப்பம். தயவு செய்து என் முடிவை மாற்றிக் கொள்ள என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள்" என்று கைகூப்பிய மாது, "விசுவநாதன் சார், நான் உங்களோடு வரத் தயாராக இருக்கிறேன்" என்று முன்னே வந்தான்.

விசுவநாதன் மகிழ்ச்சியால் நடுங்கும் கரங்களுடன் அவனை அணைத்துக் கொண்டார். எங்கிருந்தோ ஓடி வந்த கீதா தான் கொண்டு வந்திருந்த சின்னஞ்சிறிய தேசியக் கொடியை அவன் சட்டையில் குத்தி "மின்கல மாதவன் வாழ்க!" என்றாள்.

"நாட்டின் நலனுக்காகத் தந்தையையே காட்டிக் கொடுக்க முன்வந்த உன் தியாகத்தைவிடவா நான் பெரிதாகச் செய்து விட்டேன்?" என்று மெதுவாகக் கூறிய மாது பெருமிதத்துடன் விசுவநாதனைப் பின் தொடர்ந்தான்.

(நிறைந்தது)



கோகுலம் க்விஸ்

1. மரபியலின் தந்தை----------------------
2. உலகிலேயே இரண்டாவது சிறிய நாடு ----------------------
3. இந்தியா கிரிக்கெட் போட்டியில் உலகக் கோப்பையை வாங்கிய ஆண்டு ----------------------
4. நண்டு, மரவட்டை, கரப்பான் போன்றவைகள் ---------------------- தொகுதியைச் சேர்ந்தவை.
5. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் ----------------------
6. சூரியனைச் சுற்றி வரும் கோள்களில் பெரியது ----------------------
7. கிராமபோனைக் கண்டு பிடித்தவர் ----------------------
8. மைசூரில் ---------------------- நீர்வீழ்ச்சி புகழ்பெற்றது.
9. மிகச் சிறிய பறவை ----------------------
10 சாதாரண வெப்ப நிலையில் திரவ நிலையில் உள்ள உலோகம் ----------------------


இந்தப் பத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புவதோடு உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முடிவு தேதி **30.6.99**

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097




7 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு : விஜி   படம் : லலிதா




இறைச்சியை எடுக்க பறவைகள் வந்தன.
ஓ! பறவைகளை விரட்டிவிட்டு இறைச்சித் துண்டங்களில் ஒட்டியிருக்கும் வைரங்களை அந்த மனிதர்கள் எடுத்துக் கொள்வார்கள் போலும்!
சூ... போ.
வைரங்களை எடுத்துப் பத்திரப்படுத்தினான்.
சே! என்ன இது? என் மேலேயே இறைச்சி விழுந்து விட்டதே!
சிந்துபாத்திடம் ராஜாளி பறந்து வந்தது. உடனே அதைப் பிடித்துக் கொண்டான்.
மலை உச்சி வரை இந்தப் பறவை தாக்குப் பிடிக்கணும்...


ராஜாளி மலை உச்சியில் இறங்கியது. எல்லோரும் பயந்தனர்.
ஐயோ பேய்!
ஓடாதே. நான் மனிதன்தான்!
நம்ப முடியவில்லையே! இந்தப் பள்ளத்தாக்கிலிருந்து உயிருடன் திரும்பிய முதல் மனிதர் நீங்கள்தான்!
அப்படியா?
ஆமாம்! மிகுந்த மன உறுதி படைத்த சிறந்த வீரர் நீங்கள். உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி.
இந்த வைரங் களை என் அன்பளிப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.
வைரங்களைப் பகிர்ந்து கொண்டான்.


நன்றி. கப்பல் தயாராக இருக்கு. கிளம்பலாமா?
போகலாம். நானும் இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்.
நாடு திரும்பிய சிந்துபாத் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசளித்தான். செல்வந்தனாக வாழ்ந்தான்.
— தொடரும்

மகுடி இசைக்குப் பாம்பு ஆடுமா?




'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழி உண்டு. பாம்பைக் கண்டால் மனிதனுக்கும் பயம். மனிதனைக் கண்டால் பாம்பிற்கும் பயம்!

ஊர்வன பிராணிகளில் பாம்பு முக்கியமானது. இவை பத்து கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகில் வாழ்ந்து வருவதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பாம்பின் உடல் உருளையாகவும் கயிறு போல் நீண்டும் இருக்கும். தலை, உடல், வால் என்று மூன்று பகுதிகளாகக் காணப்படும்.



பாம்பின் கண்களுக்கு இமைகள் இல்லை. கண்களைச் சுற்றி கண்ணாடி போன்ற செதில் மூடியிருக்கும். இதனால் பாம்புகள் முட்புதர்களில் செல்லும்போது கூட கண்களுக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. கண் இமைக்காததால் இவை தூங்கும் போதுகூட விழித்திருப்பது போலவே தோன்றும்.



அதே போல் காதுகளும், செவிப்பறையும், பாம்புகளுக்குக் கிடையாது.



பாம்பாட்டி ஊதும் மகுடி இசையைக் கேட்டு நல்லபாம்பு ஆடுவது எப்படி? உண்மையில் பாம்புகளால் ஒலிகளைக் கேட்க முடியாது. ஆனால் தரைவழியாக ஏற்படும் அதிர்வுகளை நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். பாம்பாட்டி கைகளையும், கால்களையும் ஆட்டி மகுடியில் இசைப்பதை பாம்பு பார்த்துக் கொண்டிருக்கும். அதே போல் பாம்பாட்டியிடமிருந்து வரும் அதிர்வுகளையும் உணர்ந்து பாம்பும் அசைகிறது.

இவற்றிற்கு கேட்கும் சக்தி இல்லாவிட்டாலும் பார்க்கும் திறனும் மோப்ப சக்தியும் அதிகம். பாம்பு இரண்டாக பிளந்துள்ள நீண்ட நாக்கை வெளியில் நீட்டி காற்றில் மிதந்து வரும் வாசனையை நுகர்ந்து இரை மற்றும் எதிரிகளைக் கண்டறிந்து கொள்கிறது.

பாம்புகளின் வாய் அறை மிகப் பெரியதாக அகன்று கொள்ளக் கூடியது. இதனால் பாம்பு தன்னைக் காட்டிலும் பெரிய இரையைப் பற்றி விழுங்க முடிகிறது.



பற்கள் கூரிய முள் போன்றவை. பின்னோக்கி வளைந்திருக்கும். ஒரு பல் உடைந்து விட்டால் புதிய பல் தோன்றி விடும். நச்சுப் பாம்புகளுக்கு மேல் தாடையின் முன் பகுதியிலோ அல்லது பின்பகுதியிலோ இரண்டு பற்கள் பெரிதாக இருக்கும். இவை தான் நச்சுப் பற்கள்.

உடல் முழுவதும் உலர்வான தோலால் மூடப்பட்டிருக்கும். பாம்பு ஒரு ஆண்டிற்கு பல தடவை தோலுரிக்கும். தோல் உரியும் போது முதலில் உதட்டிலிருந்து உரியத் தொடங்கும். தோல் உரிக்கும்போது பாம்பு மெல்லத் தேய்த்துக் கொண்டிருக்கும். தோலுரித்தவுடன் பாம்பு பளபளப்புடனும் சுறுசுறுப்புடனும் காணப்படும். ஊர்ந்து செல்லும் தரை எவ்வளவு சொரசொரப்பாக இருக்கிறதோ அவ்வளவு வேகமாக பாம்பு ஓடும். கண்ணாடி போன்ற இடத்தில் பாம்பு இயங்குவது கடினம்.



பாம்புகள் குளிர் ரத்தப் பிராணிகள். அதிகக் குளிர், வெயில் நேரங்களில் பாறை இடுக்குகள், பொந்துகளில் பல பாம்புகள் ஒன்றாகச் சேர்ந்து தூங்கிக் கிடக்கும்.

குளிர் மிகுந்த துருவப் பிரதேசங்கள், நியூசிலாந்து, அயர்லாந்தை தவிர்த்து உலகெங்கும் பாம்புகள் வாழ்கின்றன. மண்ணிற்

எஸ். சுஜாதா





குள்ளும், நிலத்தின் மேலும், மரம், புதர், பாறை, பாலை மணல், சதுப்பு நிலம், தண்ணீர் நிலைகள், மலைகள், கடல்கள் என்று எங்கும் பாம்புகள் வாழ்கின்றன.

கரையான் புற்று, மரப் பொந்து, வேறு விலங்குகள் செய்த வளைகள் ஆகியவற்றில் பாம்பு புகுந்து தனது வீடாக்கிக் கொள்ளும்.

குரல்வளை மற்றும் குரல் நாண்கள் இல்லாவிட்டாலும் கூட பாம்புகள் 'உஸ்' என்ற ஒலியை எழுப்பக் கூடியவை. இவ்வொலி மூச்சு விடுவதாலேயே உண்டாகிறது.

உலகிலேயே மிகப் பெரிய பாம்பு அனகோண்டாதான்! பைத்தான், போவா, அனகோண்டா மூன்றும் மலைப் பாம்புகள். இவற்றிற்கு விஷப் பற்கள் கிடையாது. இரையை தன் உடலால் இறுக்கிக் கொள்ளக் கூடியவை. மிகவும் நீளமானவை.

உயிரியல் பூங்காக்களில் வளர்க்கப்படும் பாம்புகள் 20 ஆண்டுகள் வரை வாழக் கூடியவை. ஆனால் இயற்கையில் வாழும் பாம்புகள் இத்தனை ஆண்டு வாழ்வது சந்தேகம் தான்! ஏனென்றால் இவற்றிற்கு பகைவர்கள் அதிகம். ஒட்டுண்ணி நோய்களும் பற்றும்.


பாம்புகள் கூடி வாழக் கூடிய இயல்பற்றவை. விரைவில் பல்கிப் பெருகக் கூடியவை. பெண் பாம்பு ஆண்டிற்கு பத்து முதல் நூறு முட்டைகள் வரை இடும். சில வகைப் பாம்புகள் முட்டைகளைத் தன் உடலுக்குள் வைத்து பாதுகாப்பதுண்டு. நாகப்பாம்பு கூடுகட்டி முட்டை இட்டு குட்டி வெளி வரும் வரை வெளியில் காத்திருக்கும். முட்டையில் இருந்து குட்டி வெளிவர 40 நாட்கள் முதல் 3 மாத காலம் ஆகலாம்.

பாம்புகளில் பல்வேறு இனங்கள் உண்டு. ஒவ்வொரு இனத்திலும் ஆணும் பெண்ணும் உண்டு. ஓரினம் மற்றொரு இனத்துடன் சேராது. நாகப்பாம்பும் சாரைப் பாம்பும் சேர்ந்து குடும்பம் நடத்துவதாக நாம் நினைப்பது தவறு. அதே போல் கடிபட்ட பாம்பு, தாக்கியவர்களைப் பழி வாங்கும் என்பதும் முற்றிலும் தவறான நம்பிக்கை.

மிகச் சிறிய பாம்புகள் பூச்சி, சிலந்தி, தவளை போன்றவற்றை உண்ணுகின்றன. பெரிய பாம்புகள் பறவை, பாலூட்டி, கணுக்காலிகள், நத்தை, அட்டை போன்றவற்றை உண்ணக் கூடியவை. கருநாகம் போன்ற பாம்புகள் மற்ற பாம்புகளையும் சாப்பிடக் கூடியவை. இரையை விழுங்கும்போது வாயில் வழவழப்பான நீர் ஊறும்.

எல்லா பாம்புகளும் நஞ்சுடையவை அல்ல. 3000 இனங்களில் 300 இனங்கள் மட்டுமே நச்சுப் பாம்புகள்.

நம் நாட்டில் 350 இனப்பாம்புகள் உள்ளன. இவற்றில் 70 இனங்கள் நஞ்சுடையவை. இவற்றில் 30 வகைகள் கடற்பாம்புகள். இவை கொடிய விஷமுடையவை. குளங்களிலும் குட்டைகளிலும் வாழும் தண்ணீர் பாம்புகள் நஞ்சில்லாதவை. தரையில் வாழும் பாம்புகளில் நாகம், கண்ணாடி விரியன், கருட்டை, கட்டு விரியன்கொடிய நஞ்சுடையவை. பாம்புகள்




மிகுந்த அச்சம் உடையவை. மனிதனைக் கண்டால் தப்பி ஓட முயலும். தப்பி ஓட முடியாத நிலை ஏற்படும் போதோ, நாம் தாக்கும் போதோ தற்காப்பிற்கு நம்மை கடிக்கும். பாம்புக் கடியால் இறப்பவர்களில் பயத்தால் மரணம் அடைபவர்களே அதிகம்.

5 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரத்திற்குள் மரணம் நேரிடும். எனவே பாம்பு கடித்தால் உடனே மருத்துவரிடம் செல்வது மிகவும் அவசியம்.

பாம்பு கடித்தவுடன் மயக்கம் ஏற்பட்டால் அது பயத்தினால் ஏற்பட்ட மயக்கமே. பாம்பு நஞ்சிற்கு மயக்கம் உண்டாக்கும் சக்தி கிடையாது.


நச்சுப் பாம்பு கடித்தால் அந்த இடத்தில் எரிச்சலும் குத்தலும் உண்டாகும். பின்னர் மரத்துப் போகும். அதற்குப்பின் வீங்கும். செந்நிறமான நீர் வடியும். கால்கள் தள்ளாடும். கடித்த


• விஷமில்லாத பாம்புப் பற்கள்





• விஷப் பாம்புப் பற்கள்





அருகில் மருத்துவ வசதி இல்லாதவர்கள் பாம்பு கடித்துவிட்டால் உடனே முதலுதவி பெறுவது அவசியம். கடித்த இடத்திற்கு சிறிது தள்ளி கயிற்றால் இறுகக் கட்ட வேண்டும். இப்படிச் செய்வதால் விஷம் ரத்தத்துடன் சேர்ந்து உடலில் பரவுவது தடைப்படும். அதற்குப் பின் கடிபட்ட இடத்தை தண்ணீரால் கழுவ வேண்டும். பிறகு கத்தியினால் கீறி கடிக்கப்பட்ட இடத்திலிருந்து ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். மீண்டும் தண்ணீரால் சுத்தப்படுத்த வேண்டும். 15 நிமிடங்களுக்கு ஒரு முறை கட்டை அவிழ்த்து, ரத்த ஓட்டம் ஏற்படச் செய்து மீண்டும் கயிற்றைக் கட்ட வேண்டும். கத்தியால் கீறப்பட்ட இடத்தில் சிறிது பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைத்த நீரை ஊற்றுவது நல்லது. இந்த முதலுதவியைச் செய்த பின் கடிபட்டவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

• பாம்புகளுக்கு கீரி, கழுகு, மனிதன் முக்கிய எதிரிகள்.

• நல்லபாம்புகள் படம் எடுக்கக் கூடியவை. இவற்றிற்கு அச்சம் ஏற்படும்போது கழுத்தில் உள்ள சதை விரியும். எதிரியை அச்சுறுத்தவே பாம்பு படம் எடுக்கிறது.



அசாருதீனுக்கு அடுத்த கேப்டன்!



ஏப்ரல் மாதம் நடந்த ஷார்ஜா கோப்பையின்போது கேப்டன் அசாருதீனுக்குக் காயம் ஏற்பட்டது. அதனால் மூன்று லீக் போட்டிகளுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு அஜய் ஜடேஜாவிற்குக் கிட்டியது. மூன்றிலும் வெற்றி! இந்திய அணி இறுதிப் போட்டியில் நுழைவதற்கு ஜடேஜாவே வழி வகுத்தார். ரன்களைச் சேர்த்தார்; விக்கெட்டுகளை வீழ்த்தினார். எதிர்கால இந்திய கேப்டன் இவர்தான் என்று கிரிக்கெட் ரசிகர்கள் முடிவு செய்து விட்டனர்.

அஜய் ஜடேஜா பிறந்தது 1.2.71 ஜாம் நகரில். வலதுகை பேட்ஸ்மேன்; வலது கை நடுத்தர பந்து வீச்சாளர். 1991-92 உலகக் கோப்பையின் போது இலங்கைக்கு எதிராக அறிமுகப் படுத்தப் பட்டார். இந்த உலகக் கோப்பை ஜடேஜா பங்கேற்கும் மூன்றாவது அத்தியாயம்.

அஜய் கிரிக்கெட் எழுச்சியார்வம் கொண்டவர்; குறிப்பாக ஒரு நாள் போட்டிகளின் ஸ்பெஷலிஸ்ட், வேகமாக ஓடி ரன் எடுக்கக் கூடியவர். பந்து வீச்சிலும் திறமை மிக்கவர். எனினும் அவரின் முழுத் திறமையை வெளிக்காட்டும் வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை. ஃபீல்டிங்கில் கலக்குவார். உலகின் மிகச் சிறந்த ஆறாவதாகக் களமிறங்கும் பேட்ஸ்மேன்களில் ஒருவர்.

பேட்டிங்:

மேட்ச் 164
இன்னிங்ஸ் 149
ஆட்டமிழப் பில்லை 29
எடுத்த ரன்கள் 4361
அதிக பட்ச ஸ்கோர் 119
நூறுகள் 5
ஐம்பதுகள் 25
பிடித்த கேட்ச் 49

பௌலிங்:


ஓவர்கள் 203.4
கன்னி ஓவர்கள் 2
கொடுத்த ரன்கள் 1067
விக்கெட்டுகள் 19
சிறந்த வீச்சு 3 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகள் வீழ்த்தியது.

ஜடேஜாவின் டெஸ்ட் ஆட்டம்

1992-93 இல் தென் ஆப்பிரிக்காவிற்கு எதிராக டெஸ்ட்டில் அறிமுகம். சராசரி 30.69; எடுத்த ரன்கள் 399; இதுவரை 10 டெஸ்ட்கள் மட்டுமே ஆடியிருக்கிறார். அதிகபட்ச ஸ்கோர் 1996-97 இல் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக எடுத்த 96 ரன்கள்.

— விளையாட்டுப் பையன்

கோகுலம்



NAME...

STANDARD...


SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME...

STANDARD...


SUBJECT...

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்




NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்




NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

கோகுலம்



NAME ....

STANDARD ....

SUBJECT ....

SCHOOL ....

ஓவியப் போட்டி!

ஓவியப் போட்டியில் ஆர்வமுடன் ஏராளமானவர்கள் கலந்து கொள்கிறீர்கள். இப்போது விடு முறை வேறு, விடுவீர்களா?

இந்த மாதத் தலைப்பு – விமானம்

இத்தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை வண்ணம் தீட்டி அனுப்புங் கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் ஆறுதல் பரிசுகள் இரண்டும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள். கடைசி தேதி 20.6.99.



கள் உள்ளன. இந்தச் சாக்லேட் மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கே!

சாக்லேட்டின் விலை சுமார் 27 ரூபாய். பணத்தை எடுத்துட்டு எங்கே போறீங்க? கொஞ்சம் இருங்க. இது நம்ம ஊருக்கு இன்னும் வரலை. கனடா, அமெரிக்கா, அரபு நாடுகளில்தான் விற்கப்படுகிறது.

— கமலநாதன்



டூ இன் ஒன் சாக்லேட்!


உங்களுக்கு சாக்லேட்டும் பிடிக்கும், விளையாட்டு பொம்மைகளும் பிடிக்கும்! இந்தச் சாக்லேட்டுக்குள்ளே விளையாட்டு பொம்மை இருந்தால்? ரொம்ப சந்தோஷம்தானே! படத்தில் உள்ளது டூ இன் ஒன் சாக்லேட். இது முட்டை வடிவத்தில் இருக்கும். மேலே சுற்றியுள்ள பேப்பரை பிரித்தால் சாக்லேட் இருக்கும். சாக்லேட்டைப் பிரித்துச் சாப்பிட்டால் உள்ளே பிளாஸ்டிக் டப்பா இருக்கும். டப்பாவைப் பிரித்தால் பொம்மைகளின் பாகங்கள் உதிரியாக இருக்கும். இவற்றை எடுத்து ஒன்று சேர்ப்பதுதான் விளையாட்டு.

ஒவ்வொரு சாக்லேட்டிற்குள்ளும் கார், கிறிஸ்துமஸ் தாத்தா, சர்க்கஸ் கோமாளி என்று பல வித பொம்மை



கோடை விடுமுறைப் போட்டி – II

I





பழமொழிகளைக் கண்டுபிடியுங்கள்!

இங்கு இரண்டு தொகுதிகளாக இருபத்தி இரண்டு படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள படங்களின் முதல் எழுத்துகளையும் இரண்டாவது தொகுதியில் உள்ள படங்களின் இரண்டாவது எழுத்துகளையும் சேர்த்து எழுதுங்கள். உங்களுக்கு நன்கு பழக்கப் பட்ட இரண்டு பழமொழிகள் கிடைக்கும். இந்தப் பழமொழிகளை எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

II




கோடை விடுமுறைப் போட்டி – II


அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழுமுகவரியையும் எழுதுங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.


சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு குலுக்கல் முறையில் முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. **முடிவு தேதி 30.6.99.**

பறக்கும் நண்டு!

கதை : நா. கௌரி   படம் : சசி





என்ன?
ஆமாம். பறவைகளைப் போல் பறக்கப் போகிறதாம்!
அவர்கள் சொல்வது உண்மையா சுபாகு?
ஆம் தலைவரே! நான் பறக்கப் போறேன்.
பறவைகள், பூச்சிகளால் தான் பறக்க முடியும். உன்னாலும் என்னாலும் முடியாது.
முயற்சி செய்தால் முடியாதது ஒன்றும் இல்லை.
உன்னைத் திருத்த முடியாது. சரி! எப்படி பறப்பே?
பெரிய மரத்திலிருந்து பறந்து கீழே வருவேன்.
பறந்து வர முடியாது. தொப்பென்று கீழே விழுவே.
ஆமாம்!
ஆமாம்!
முதலில் கீழிருந்து மேலே பறக்க முயற்சி செய்!
நன்றி தலைவரே!



மறுநாள். சுபாகு கீழிருந்து பறக்க முயற்சி செய்தது.
ம். ஹும்.. ஒண்ணும் முடியலை. மேலிருந்து கீழ் நோக்கித்தான் பறக்கணும்.
சுபாகு மெதுவாக சிறிய பாறையின் மீது ஏறியது.
பறப்பது பற்றியே நினைத்த சுபாகு பெரிய தவளையின் மீது அமர்ந்தது.
உடனே தவளை வேகமாகத் துள்ளிக் குதித்தது. சுபாகுவும் கீழே வந்தது.
ஹா! ஹா! நான் பறந்து விட்டேன்.
வெற்றி! வெற்றி! பறக்கும் போது எவ்வளவு சுகமாக இருக்கு! ம்...
சுபாகுவின் அடியில் இருந்த தவளை மெதுவாக நகர்ந்து மறைந்தது.


மறுநாள் –
சுபாகு கீழே இறங்கு. இவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தால் சிதறிப் போயிருவே!
நேற்று அந்தப் பாறையிலிருந்து அழகா பறந்தேன். உங்களுக்குத் தெரியது.
வேண்டாம். சொல்வதைக் கேள்!
சுபாகு கைதட்டியபடி குதித்தது.
ஐயோ அம்மா!
வைத்தியரே சுபாகுவுக்கு மாவுக்கட்டுப் போட்டு படுக்கவையுங்கள்!


'அதிகாலை நேரம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



முதல் பரிசு
வி. ஸ்ரீதர்,
ஒன்பதாம் வகுப்பு,
தஞ்சாவூர்



இரண்டாம் பரிசு
என்.எஸ். கோபால்,
ஒன்பதாம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி,
திருவள்ளூர் மாவட்டம்



மூன்றாம் பரிசு
பி. சுரேந்திரன்,
ராயன்பாளையம்,
காரைக்கால்

ஓவியப் போட்டி முடிவுகள்





ஆறுதல் பரிசு

ஆ. ரேவதி,
ஒன்பதாம் வகுப்பு
மயிலாடுதுறை





ஆறுதல் பரிசு


ஜி. கணேஷ்,
பத்தாம் வகுப்பு,
இஞ்சிக்குடி,
திருவாரூர் மாவட்டம்

வாயால் சுவாசித்தால் கெடுதலா?

● ப. மகேஸ்வரமணி, சோழபுரம்.

? தேமல் எவ்வாறு வருகிறது? எப்படிப் போக்குவது?


! தேமல் வருவதற்குக் காரணம் ஒரு பூஞ்சைக்காளான் கிருமி! பெயர், பிட்டி ரோஸ் போரம் ஃபர் ஃபர் (PITYROSPORUM FURFUR) இக்கிருமிகள் நம் தோலில் ஆயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்ததும் தோலின் மேல் அடுக்கு அணுக் களைப் பாதிக்கும். இதன் விளைவுதான், தேமல். காளான் கொல்லி மருந்து ஒன்றை மருத்துவரின் பரிந்துரைப்படி பல மாதங்களுக்குத் தேமல் உள்ள இடத்தில் பூசி வந்தால் குணமாகும். சுயசுகாதாரம் பேணுவது தேமலைத் தவிர்க்க சிறந்த வழி. குறிப்பாக, அடுத்தவர்கள் உபயோகித்த சோப்பு, சீப்பு, துவாலை, உள்ளாடைகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்.



● எஸ். வினோத்பாபு, கபிஸ்தலம்.

?வைட்டமின்களையும், ரத்தத்தையும் பல வகைகளாகப் பிரித்து வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

! வேதியியல் பண்புப்படி ஒவ்வொரு வைட்டமினும் வெவ்வேறு வடிவத்தில் உள்ளது; வெவ்வேறு பணிகளைச் செய்கிறது; ரத்தத்தில் இவற்றின் அளவு குறையும் போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோயை உண்டு பண்ணுகிறது. இதனால்தான் ஒவ்வொரு வைட்டமினுக்கும் தனித்தனிப் பெயர் கொடுத்து வகைப்படுத்தி இருக்கிறார்கள். இதுபோல் ரத்தம் பார்ப்பதற்கு ஒரே நிறத்தில் (சிவப்பு) தெரிந்தாலும் அதில் உள்ள அணுக்களில் வேறுபாடு காணப்படும். அவற்றை அடிப்படையாக வைத்து ரத்தப்பிரிவுகளை வகைப் படுத்தியுள்ளனர். விபத்து, நோய்கள், அறுவை சிகிச்சை போன்றவற்றால் ஒருவருக்கு ரத்தமிழப்பு நேரும்போது, அதை ஈடு செய்ய அடுத்தவரின் ரத்தத்தைச் செலுத்த வேண்டியது வரும். அப்போது அவருடைய ரத்த வகை எது என்று தெரிந்தால் தான், அதே வகை ரத்தத்தைப் பெற்று செலுத்த முடியும். ரத்த வகை மாறி விட்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இதனைத் தவிர்க்கவும் ரத்தவகை அவசியம். சரி, வினோத்பாபு... உனக்கு ஒரு க்விஸ்! வைட்டமின்களையும் ரத்தத்தையும் வகைப்படுத்தியவர்கள் யார், யார்?



கேட்கட்டுமா டாக்டர்?



● க. பிரஸாத், திருவானைக்கோவில்.

? வாயால் சுவாசித்தால் உடலுக்குக் கெடுதலா, டாக்டர்?

! நிச்சயம் கெடுதல்தான், பிரஸாத்! வாயால் சுவாசித்தால் காற்றில் உள்ள அசுத்தங்கள் அப்படியே நுரையீரல்களுக்குள் சென்று விடும். இதனால் அடிக்கடி சளி பிடிக்கும். வாய் முழுவதும் ஈரப்பசை இல்லாமல் உலர்ந்து போவதால் பேச்சு சரியாக வராது; வாய், நாக்கு, தொண்டை போன்றவற்றில் புண் ஏற்படும். இரவில் தொண்டை காய்ந்து விடுவதால் தூக்கம் கெடும். அடிக்கடி காது வலி, காதில் சீழ் போன்ற தொல்லைகள் தொடரும். இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான கெடுதல் எது தெரியுமா?? தெற்றுப்பல்! இது முக அழகையே கெடுத்து விடும்.




● எம்.ரஃபிக் ஜக்கரியா, நன்னிலம்.

? சைனஸ், ஈஸ்னோபிலியா வேறுபாடு என்ன, டாக்டர்?

நம் முகத்தில் உள்ள காற்றறைகளுக்குப் பெயர் 'சைனஸ்' (SINUS). நமக்கு மொத்தம் நான்கு காற்றறைகள் உள்ளன. மூக்கு வழியாக சுவாசிக்கும் போது அந்தக் காற்றின் வெப்பத்தை ஒரே சீராக வைத்திருப்பது இவற்றின் வேலை. ஆனால் சில காரணங்களால் இந்தக் காற்றறைகளில் காற்று இருப்பதற்குப் பதிலாக நீர் கோர்த்துக் கொள்ளும். இதைக் 'காற்றறை அழற்சி' (SINUSITIS) என்று அழைப்போம். அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பது, ஒவ்வாமை, அதிகக் குளிர்ச்சி, மூக்கின் நடுச்சவ்வு விலகியிருப்பது போன்ற காரணங்களால் காற்றறை அழற்சி ஏற்படுவதுண்டு. பொது மக்கள் பேச்சு வழக்கில் 'சைனஸ்' என்று குறிப்பிடுவது இத்தகைய காற்றறை அழற்சி நோயைத்தான். சரி, இப்போது 'ஈஸ்னோபிலியா'வுக்கு வருவோம். இது ரத்தத்தில் ஏற்படுகின்ற ஒரு குறைபாடு. ரத்த வெள்ளையணுக்களில் 'ஈஸ்னோஃபில்' (EOSINOPHIL) என்றொரு அணுக்கள் உள்ளன. இவற்றின் இயல்பான எண்ணிக்கை 0விலிருந்து 4 சதவிகிதம். நம் உடலில் குடல் புழுக்கள் இருந்தால், ஒவ்வாமை ஏற்பட்டால், சில குறிப்பிட்ட நோய்க் கிருமிகள் உடலைப் பாதித்தால், ஆஸ்துமா தொல்லை கொடுத்தால், யானைக்கால் வியாதி வந்தால் ஈஸ்னோபில் எண்ணிக்கை ரத்தத்தில் அதிகரித்து விடும். இதைத்தான் 'ஈஸ்னோஃபிலியா' என்கிறோம்.

என்ன வினோத் பாபு, உன் க்விஸ்ஸுக்கான விடை தெரிந்து விட்டதா? தெரிந்தால் விடையை சரி பார்த்துக் கொள்: வைட்டமின்களை வகைப்படுத்தியவர்கள் ஹாப்கின்ஸ் (Hopkins), ஃபங்க்(Funk). ரத்தத்தை வகைப்படுத்தியவர் லான்ட்ஸ்டீனர் (Landsteiner).

டாக்டர் கு. கணேசன்



வைகை ஆற்றின் கரையில் குரு தீர்த்தம் என்று ஒரு ஊர். பிரகஸ்பதி தவம் செய்து அருள் பெற்ற ஸ்தலம். அங்கே கனி மரங்கள் ஏராளம். அதனால் பல சித்தர்களும், முனிவர்களும் அங்கு தவம் செய்தனர்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த சுகலன் - சுகலைக்கு நெடு நாட்கள் குழந்தை இல்லாமலிருந்தது. மீனாட்சி - சுந்தரேஸ்வரர் ஆலயத்துக்குத் தினம் சென்று தங்களால் முடிந்த கைங்கர்யம் செய்து பிரார்த்தித்து வந்தனர். அதனால் அவர்கட்கு வரிசையாகப் பிள்ளைகள் பிறந்தன. தவமிருந்து பெற்றப் புதல்வர்களானபடியால் பெற்றவர்கள் அவர்களை மிகவும் செல்லமாக வளர்த்தனர். தப்பு செய்தாலும் கண்டிக்க மாட்டார்கள். அதனால் அவர்கள் பொல்லாதவர்களாக வளர்ந்தார்கள்.

சுகலன் - சுகலை இருவரும் முதுமையடைந்த பின் ஒருவர் பின் ஒருவராகக்

பன்றி மந்திரிகள் பன்னிருவர்!



ஆர். பொன்னம்மாள்

காலமாயினர். அதன் பிறகு ஆளுவார் அடக்குவார் இல்லாமல் பிள்ளைகள் திரிந்தனர். ஒரு நாள் வேட்டர்களோடு மான், முயல் போன்றவற்றைத் துரத்திய படி வனத்துக்குள் சென்றனர்.

அங்கே ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் ஒருவன், "அடேய்! இவரது சடாமுடி திரித்திரியாய் தரையில் இடிக்கும்படி தொங்குகிறதே! இது நிஜ

முடியா? ஒட்ட வைத்ததா?" என்றான்.

"ஏன் சந்தேகம்? இழுத்துப் பார்த்து விடேன்" என்றான் இன்னொருவன்.

"இவரைச் சுற்றி புற்று வளர்ந்து கொண்டிருக்கிறது. கரையான் கடித்தால் கூடவா வலிக்காது?" என்றான் மூன்றாமவன்.

"அடேய்! சுகன்யை இப்படித்தான் புற்றைக்குத்தி அதில் இரத்தம் வர அவரையே கல்யாணம் செய்து கொள்ளும்படி ஆயிற்று" என்றான் கடைக்குட்டி.

"அவருக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நான் மணந்து கொள்கிறேன்" என்றான் நான்காமவன்.

"ஆசையைப் பார்! நான்தான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்றான் மற்றொருவன்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.


"டேய்! இவன் பெரிய திருடனாயிருக்க வேண்டும். ஆள் வருகிற சப்தம் கேட்டு கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்து விட்டான்! தாடியைப் பிடித்து இழுத்தால் உண்மை விளங்கிவிடும்" என்றான் ஆறாமவன்.

உடனே அனைவரும் முனிவரை நெருங்கி தாடியையும், சடா முடியையும் பற்றி இழுத்தனர். ஒருவன் சிறு குச்சியை காதினுள்ளும், மூக்கினுள்ளும் விட்டான்.

"கோயிலில் ஒருவர் நன்றாக வயலின் வாசித்தாரே... கேட்டாயா?"

"கேட்டேன் தாத்தா ஆனால், அவர் தர மாட்டேன் என்று சொல்லி விட்டார்!"

- பாலு, சென்னை



முனிவரின் தவம் கலைந்தது. விழித்துப் பார்த்தார். விழிகள் சிவப்பேறிக் கிடந்தன.

"சதா உறுமிக் கொண்டிருக்கும் பன்றி! ஓயாமல் தீயவையே பேசும் நீங்கள் பன்றியாக மாறக்கடவது! புல்லையும், கல்லையும், மண்ணையும், மணலையும் வாரி வீசிய நீங்கள் மண்ணைக் கிளறும் பன்றிகளாகப் பிறந்து, பிறந்தவுடன் பெற்றவரை இழந்து பாலுக்காகத் தவிக்கக் கடவது" என சபித்து விட்டார்.

அவர்கள் நடு நடுங்கிப் போனார்கள். ஓடி வந்து அவர் காலடியில் விழுந்து விம்மி விம்மி அழுதனர். "முனிவரே அறியாமையால் நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். சோம்பேறியாய், முட்டாளாய் வாழ்ந்ததின் பயன் இது. சாபத்தை மாற்ற வேண்டும்" எனப் பலவாறு வேண்டினர்.

முனிவருக்கு அவர்கள் மேல் இரக்கம் ஏற்பட்டது. "குழந்தைகளே! சாபத்தை மாற்ற முடியாது. ஆனால் அதற்கு பிராயசித்தம் சொல்கிறேன். தினமும் சொக்கநாதரை வழிபடுங்கள். நந்தவனத்தைப் பேணி பூப்பறித்துக் கொடுங்கள். சந்தனம் அரைத்துக் கொடுங்கள். அபிஷேக நீர் சுமந்து செல்லுங்கள். ஏழை, எளியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவிகளைச் செய்யுங்கள். பன்றியாய் அவதரித்துத்தான் திருமால் கடலில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பூமியை மீட்டார். பன்றிப் பிறவியை பசுபதீஸ்வரர் புனிதப்படுத்துவார்" என்று அன்புடன் கூறிவிட்டு மீண்டும் யோக நிஷ்டையில் ஆழ்ந்து விட்டார்.

சுகலனின் மகன்களும் மனம் திருந்தி சமூகத் தொண்டிலும் தெய்வத் தொண்டிலும் தங்கள் வாழ் நாளைச் செலவிட்டனர். அவர்களிடம் இப்போது அட்டகாசமும், அக்கிரமமும் இல்லை! அன்பும், பண்புமே இருந்தன. குலத் தொழிலை ஒழுங்காகச் செய்து வந்தனர். அவர்களது வாழ்க்கை முடிந்ததும் முனிவர் சாபப்படி பன்றிக் குட்டிகளாகப் பிறந்தனர்.

ராஜ ராஜ பாண்டியன் வேட்டையாடும் போது ஆண் பன்றி மூர்க்கமாய் சண்டையிட்டு பெரும் படையை அழித்தது. முடிவில் மண்டை உடைந்து மாண்

சாதனைச் சிறுவன்!



சாதனைச் சிறுவர்கள் பகுதியில் இந்த மாதம் இடம் பெறுபவன் சூரஜ்குமார். வயது 3. தேனியில் உள்ள கம்மவார் சங்கம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் எல்.கே.ஜி. படித்துக் கொண்டிருக்கிறான். சூரஜ்குமாரின் திறமைதான் என்ன? வெளிநாடுகளின் தலைவர்கள், பிரதமர்கள், இந்தியாவின் மந்திரிகள், ஜப்பானில் போடப்பட்ட அணுகுண்டு பற்றிய செய்திகள், யுஎன்ஓ, யூனிசெஃப், யுனெஸ்கோ, ஐ.எஸ்.ஆர்.ஓ பற்றிய முழுவிவரங்கள், உலக நாடுகளின் கரன்சிகள் இன்னும் ஏராளமான பொது அறிவுத் தகவல்களை விரல் நுனியில் வைத்திருக்கிறான்.

ஜனவரி மாதம் நடைபெற்ற பள்ளி ஆண்டு விழாவில் மேடை ஏறி மாணவர்கள், ஆசிரியர்கள் கேட்ட 500 கேள்விகளுக்கு சளைக்காமல் பதில் அளித்து சாதனை புரிந்திருக்கிறான்! இச்சாதனைக்காக பள்ளி நிர்வாகம் தங்க மோதிரத்தையும், மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னாடையும் பரிசாக அளித்திருக்கிறார்கள். சூரஜ்குமாரின் சாதனைகள் தொடர நாமும் வாழ்த்துவோம்!

— தேனி முருகேசன்

டது. சர்ச்சரன் என்னும் வேடன் கை வில்லால் பெண் பன்றியும் இறந்தது.

க்ஷத்திரியர்களைப் போல் ஓடாமல் எதிர்த்ததால் பன்றி இறந்த இடம் பன்றி மலை என்று பெயர் பெற்றது.

பன்றிக்குட்டிகள் பசியால் துடிப்பதைக் காணச் சகியாத சொக்கநாதப் பெருமான் தாய்ப் பன்றி உருவெடுத்து வந்து பால் கொடுத்தார்.

கணவரைத் தேடிக் கொண்டு வந்த தேவி மீனாட்சி, இதைக் கண்டு ஆச்சரியத்துடன், "ஸ்வாமி! உலகத்தில் கோடானு கோடி உயிர்கள் துயரத்தில் தவிக்கின்றன. இந்தப் பன்றிக் குட்டிகள் அப்படியென்ன விசேஷம்?" என்று கேட்டார்.

சுந்தரேஸ்வரர், "தேவி! முனிவர் வாக்குக் கொடுத்தபடி இந்தப் பன்றிக் குட்டிகளைப் புனிதப்படுத்த வேண்டும். அதோடு இவர்களது முன்ஜென்ம சேவையை கௌரவப்படுத்தவும் எண்ணம் கொண்டேன். இவர்கள் முகம் மட்டும் வராகமாயிருக்கும். ஞானப்பால் கொடுத்து நீ சம்பந்தரைப் பாட வைத்தது போல் இவர்களை ராஜராஜ பாண்டியனின் மந்திரிகளாக்கிப் பெருமைப்படுத்துவேன்" என்றார்.

கைலாசநாதர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பன்றிக் குட்டிகள் பன்றி முகத்தோடு வீரமிக்க மனித உடல் கொண்டு நின்றன. ஆனால் குகையை விட்டு வெளிவர வெட்கி அங்கேயே இருந்தன.

சுந்தரேசப் பெருமான் பாண்டியன் கனவில் "ஊருக்கு வெளியே சமீபத்தில் நீ வேட்டையாடிய கானகத்திலுள்ள குகையில் பன்றி முகத்தோடு பன்னிரண்டு வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களை அமைச்சர்களாக்கிக் கொண்டு ராஜ்ஜியத்தை நடத்து. அவர்களுக்கு சகல திறமைகளையும் அருளி இருக்கிறேன். அவர்களால் பாண்டிய நாடு செல்வமும் செல்வாக்கும் வெற்றியும் செழிப்பும் கொண்டு விளங்கும்" என்று கூறினார்.

அரசன் பன்றிமலை சென்று சிவபெருமான் அருள் பெற்ற அவர்களை அழைத்து வந்து அமைச்சர்களாக்கி ஆனந்தமாக அரசாண்டான்.

THE MAGIC OF MANGOES

ARE YOU ENVIRONMENT-FRIENDLY?
- quiz

JUNE '99
Rs. 6/-



JIMMY
- *Petpals*

FREE LABELS

MY CHILDHOOD HOME

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் இரண்டாவது கதை

என்னால் முடியுமா?

எம். எஸ். சதீஷ்குமார்

அன்று விடுமுறை நாள். ரவி கிரிக்கெட் விளையாடப் போய்க் கொண்டிருந்தான். அப்போது சமையலறையிலிருந்து அம்மாவின் குரல் ஒலித்தது.

"டேய் ரவி! விடுமுறைதானே. ரேஷன் கடைக்குப் போய் ஜீனியும் மண்ணெண்ணெயும் வாங்கிட்டு வாடா!"

"போங்கம்மா! என்னால் க்யூவில் கால் வலிக்க நின்று வாங்கி வர முடியாது" எனக் கூறிவிட்டு விளையாடச் சென்று விட்டான் ரவி.

ரவி பதினோராம் வகுப்பு மாணவன். நல்ல மதிப்பெண்கள் பத்தாம் வகுப்பிலே பெற்று பதினோராம் வகுப்பிற்குப் புதிய பள்ளியில் சேர்ந்திருந்தான். ஆனால், அவனிடம் எந்த வேலை சொன்னாலும் என்னால் முடியாது எனக் கூறி விடுவான். இதனால் ரவியின் பெற்றோர் அவன் போக்கை நினைத்துக் கவலைப்பட்டனர்.

ரவியின் அப்பா ஒரு தொழிற்சாலையின் மானேஜர். அன்று, அவர் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது, "ரவி! இங்கே வா!" என்று கூப்பிட்டார்.

"என்னங்கப்பா?"

"மாநில அளவில் ஒரு கட்டுரைப் போட்டி நடைபெறுகிறது. தலைப்பு 'தன்னம்பிக்கை'. நீ கலந்துக்கிறியா ரவி?" என்று கேட்டார் அப்பா.

"மாநில அளவிலா? பல பள்ளிகளிலிருந்து திறமைமிக்க மாணவர்கள் வருவார்களே! என்னால் வெற்றி பெற முடியாது. நான் கலந்து கொள்ளவில்லை" என்று கூறி வேகமாகச் சென்று விட்டான்.


ரவியின் அப்பா அவனிடம் மருந்துக்குக் கூட தன்னம்பிக்கை இல்லாதது கண்டு வருத்தமுற்றார்.

மாலை 5 மணி. ரவி பள்ளியிலிருந்து வந்தான். மெதுவாக பையை வைத்து விட்டுத் தனது காலாண்டுத் தகுதிச் சான்றிதழை அப்பாவிடம் நீட்டினான்.

தகுதிச் சான்றிதழை வாங்கிப் பார்த்ததும் அவன் அப்பா அதிர்ந்தார். எப்போதும், வகுப்பில் முதலிடம் பெறும் ரவி இந்தத் தேர்வில் ஏழாம் இடம் பெற்றிருந்தான்.

"எப்போதும் முதலிடம் பெறும் நீ ஏன் ஏழாமிடத்திற்கு வந்தே?" என்று அதிர்ச்சி





யுடன் கேட்டார் அப்பா.

ரவி குரலைத் தாழ்த்தி "இது புதுப் பள்ளி! என்னை விட திறமைசாலிகள் ஆறு பேர் இருக்காங்க. அவங்களை என்னால் முந்த முடியவில்லை" என்றான்.

ரவியின் அப்பாவோ ரவியின் தன்னம்பிக்கையும் திறமையும் நாளுக்கு நாள் குறைந்து வருவது கண்டு மிகவும் வருந்தியவாறே தகுதிச் சான்றிதழில் கையொப்பமிட்டார்.

மறுநாள் காலை. விடுமுறையாதலால் ரவி தொலைக்காட்சியில் இந்தியா - தென்னாப்பிரிக்கா கிரிக்கெட் போட்டியை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆட்ட முடிவில் இந்தியா கடுமையாக முயன்று வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது.

அன்று இரவு, ரவி சாப்பிட உட்கார்ந் தான். ரவியின் அப்பாவும் அவனுடன் சேர்ந்து சாப்பிட்டார்.

"ரவி!"

"என்னங்கப்பா?"

"இன்னிக்கு நடந்த மேட்ச்ல யார் ஜெயிச்சது?"

"எந்த மேட்ச் அப்பா!"

"இந்தியா - தென்னாப்பிரிக்கா ஃபைனல்."

"இந்தியாதான் வெற்றி பெற்றது."

"தென்னாப்பிரிக்கா மிக பலம்வாய்ந்த அணி. ஏறக்குறைய எட்டு பேட்ஸ்மேன்கள் இருக்கிறாங்க. அந்த அணியையா இந்தியா வென்றது?" என்று கேட்டார் அப்பா வியப்புடன்.

"அப்பா! நம்மிடமும் திறமையான வங்க இருக்காங்க. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்."

"அப்படியென்றால்?"

"அம்மா, நான் எழுதின ஜோக் வந்திருக்கு, பாருங்க."

"என்ன, திரும்பித்தானே வந்திருக்கு?"

"வந்திருக்குன்னுதானே சொன்னேன்."

- இரா. உதயகுமார்



''அப்பா! எவ்வளவு பலம் வாய்ந்த அணியென்றாலும் முயற்சியுடன் போராடினால் வெற்றி நிச்சயம்'' என்று பெருமிதத்துடன் கூறினான் ரவி.

''முயற்சியென்பது, இந்திய அணியினருக்கு மட்டும்தான் பொருந்துமா?''

''இல்லை! எல்லோருக்கும்தான் பொருந்தும்.''

''அப்படியானால் உனக்குக் கூட பொருந்தும்தானே, ரவி?''

''என்னப்பா சொல்றீங்க?''

''உன் வகுப்பில் உன்னை விட திறமைசாலிகள் ஆறு பேர் இருப்பதாகச் சொன்னே. நீ முயற்சி செய்தால் அவர்களை முந்தலாம் அல்லவா? அதேபோல், மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முயன்றால் வெற்றி பெறலாம் இல்லையா?'' என்று கேட்டார் அப்பா.

ரவி அப்பாவின் திறமையான வாதம் கண்டு மலைத்து நின்றான்.

''என்ன ரவி! மௌனமாக இருக்கே?'' கேட்டார் அப்பா.

''என்னை மன்னிச்சுடுங்கப்பா! இனிமேல் விடாமுயற்சி செய்து வகுப்பில் முதலிடம் பெறுவேன்.''



ரவியையே பார்த்துக் கொண்டிருந்தார் அப்பா.

''அப்பா! இனிமேல் 'என்னால் முடியாது' எனச் சொல்லவே மாட்டேன். நீங்கள் சொன்ன மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்கிறேன். 'என்னால் முடியும்' என்ற தன்னம்பிக்கையை எப்பொழுதும் கைவிட மாட்டேன்'' என்று உறுதி அளித்தான் ரவி.


ரவியின் உறுதி கண்டு அவன் தந்தை உள்ளமெல்லாம் பூரித்தார்.

தர்மம் தலைகாக்குமா?

படம் : தாமரை   கதை : வெ.அ. கார்த்திகேயன்




இந்தாம்மா, ரூபாயை வச்சுக்க.
நீங்க நல்லா இருக்கணும் ஐயா.
என்ன சுந்தரம் கேட்டதும் கொடுத்துட்டே?
குழந்தைக்கு உடம்பு சரியில்லையே, பாவம்!
வண்டி சிறிது தூரம் சென்றது.
ஐயா! வண்டியை நிறுத்துங்க.
என்னய்யா வேணும்?
போன வாரம் ஏற்பட்ட வெள்ளத்துல வீடு, மாடு எல்லாம் போச்சு. சாப்பாட்டுக்கே வழியில்லை. குழந்தைகள் பசியால வாடுதுங்க.


உங்களால முடிந்ததை உதவுங்க. புண்ணியமா இருக்கும்.
எங்களைப் பார்த்தால் எப்படி தெரியுது? ஆளாளுக்குத் தொந்தரவு செய்துகிட்டு... வழியை விடு.
புண்ணியமெல்லாம் வேண்டாம்.
இந்தாங்க ரூபாய்.
நீங்க மகராசனா நல்லா இருக்கணும்.
என்ன சுந்தரம்! தர்ம பிரபுன்னு நினைப்பா?
இவனுக்கு யார் தர்மதுரைன்னு பேர் வச்சாங்க?
என்ன பேச்சையே காணோம்?
ம்... ஒண்ணும் இல்லை.
உன்னை விட வசதியான நானே, தானம் செய்து பணத்தை வீணாக செலவு செய்யாதபோது உனக்கெதுக்கு?
கஷ்டப்படும் போது பார்த்துட்டு சும்மா இருக்க முடியலை.


உன்கிட்ட இருந்த பணமெல்லாம் போச்சு. இனி யாராவது கேட்டால் என்ன செய்வே?
உன்கிட்ட கடன் வாங்கிக் கொடுப்பேன்.
நீ உருப்பட மாட்டே! தர்மம் தலைகாக்கும் என்பதெல்லாம் அந்தக் காலம்.
நான் தலை காக்கிறதுக்காக செய்யலை. என்னால முடிந்ததைச் செய்யறேன்.
இருட்ட ஆரம்பித்தது.
இந்தக் காட்டுப் பாதையைக் கடந் துட்டால் பத்திரமாக ஊர் போயிடலாம்.
அங்கே பார் தர்மதுரை. நாலு பேர் ஓடி வர்றாங்க.
டேய் நிறுத்துங்கடா.
எதுக்கு?
கையில இருக்கிற பணம், நகை எல்லாம் எடுத்துக் கொடுங்க.
எங்கிட்ட ஒண்ணுமே இல்லைங்க.


ஓரமா போய் நில்லு. நீ செயின், மோதிரம் எல்லாம் கழட்டு.
நான் தரமாட்டேன்.
அடிக்காதீங்க, எல்லாம் தரேன்.
சீக்கிரம், இதை முதலிலேயே செய்திருக் கலாமே!
திருடர்கள் ஓடி விட்டனர்.
ஐயோ! தாமதுரை நல்லா அடிச் சிட்டாங்களா?
ஆமாம். வலி உயிர் போகுது.
நான் வண்டியை ஓட்டறேன். டாக்டர்கிட்ட போகலாம்.
உன் தர்மம் தலையை மட்டும் இல்லை, உன்னையே காப்பாத்திருச்சு!

ராஜு பாடிக் கொண்டிருக்கும் போது கவிதா உள்ளே நுழைந்தாள்.

"என்ன ராஜு! புல்லைப் பற்றி ஏதோ பாடிக் கிட்டிருக்கே?" என்று கேட்டாள் கவிதா.

"வா கவிதா! 'நிலா ராணி' என்ற கவிதை புத்தகத்தைப் படிச்சேன். அதில் வரும் ஒரு பாட்டுதான் இது" என்றான் ராஜு.

"புல்லை வைத்து எழுதிய பாட்டை நான் படிச்சதில்லை. கொஞ்சம் பாடேன்!"

"பச்சைப் பசும்புல்லே
படர்ந்து வளரும் புல்லே
இச்சை கொண்ட விலங்கின்
இரை யாகும் புல்லே

வெயில் மழையில் குளித்து
வயலில் வளரும் புல்லே
மண்ணின் அரிப்பைத் தடுக்கும்
மார்க்கம் கொண்டாய் புல்லே!"

"இந்த புத்தகத்தை செ.சு. மலரடியான் எழுதியிருக்கார். நீயும் படிச்சிப்பார்" என்று புத்தகத்தைக் கொடுத்தான் ராஜு.

"ராஜு, நான்கூட வாண்டு மாமா எழுதிய 'அறிவியல் தகவல்கள்' இரண்டாம் தொகுதியைப் படிச்சேன். நம்மைப் போன்ற மாணவர்களுக்கு வரக்கூடிய சந்தேகங்களுக்கு அறிவியல் அடிப்படையில் அழகாக தகவல்களைத் தந்திருக்கார் தெரியுமா?"

"என் நண்பனிடம் இருந்தது. நானும் வாங்கிப் படிச்சேன். சீதா ஏன் இன்னும் வரலை?" என்று கேட்டான் ராஜு.

"அவ எனக்கு முன்னாலேயே கிளம்பிட்டாள். கண்ணனிடம் கணக்குப் புத்தகத்தைக் கொடுத்துட்டு வர்றேன்னு சொன்னாள்."

"இதோ சீதா வந்தாச்சு! கையிலே என்ன புத்தகம்?" என்று ஆர்வத்துடன் கேட்டான் ராஜு.

"எனக்குப் பிடிச்ச கதைகள் உள்ள புத்தகம். என்னன்னு சொல் பார்க்கலாம்?"

"உனக்குப் பிடிச்சதா?.... மரியாதை ராமன் கதைகளா? யார் எழுதியிருக்காங்க?"

"ஆர். பொன்னம்மாள் எழுதியிருக்காங்க. இருபது கதைகள் இருக்கு இதில். படிக்கும் போது ஆசிரியரே கதை சொல்ற மாதிரி நல்லா இருக்குன்னு கண்ணன் சொன்னான்."


"ராஜு! உன் குட்டித் தங்கை படிக்கிற மாதிரி அலிபாபாவும் நாற்பது திருடர்களும், அலாவுதீன் அற்புத விளக்கு மாதிரி கதைகள் தேடினியே, கிடைச்சுதா?" என்றாள் கவிதா.

"எனக்குக் கிடைக்கலை கவிதா!"

"ஓரியன்ட் லாங்மேனில் இந்த மாதிரி பத்துப் புத்தகங்கள் போட்டிருக்காங்க. உன் தங்கைக்கு படிக்க எளிமையா இருக்கும். படங்களும் இருக்குது" என்றாள் கவிதா.

"கவிதா! அம்மா தேடுவாங்க. வா போகலாம்" என்று சீதா கூறவும் ராஜுவிடம் விடை பெற்றுக் கிளம்பினாள் கவிதா.

– ரே



* அறிவியல் தகவல்கள், இரண்டாம் தொகுதி, வாண்டு மாமா, பக். 96, ரூ. 24/- கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.

* நிலா ராணி, செ.சு. மலரடியான், பக். 100, ரூ. 24/- சேரன் பதிப்பகம், டி/17, லயோலா குடியிருப்பு, சென்னை - 94.

* மரியாதை ராமன் கதைகள், ஆர். பொன்னம்மாள், பக். 120, ரூ. 22/- திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

* அலிபாபாவும் நாற்பது திருடர்களும், ஆர். இராஜ கோபாலன், ஓரியன்ட் லாங்மேன், 160 அண்ணா சாலை, சென்னை - 2.



வெள்ளரிப் பிஞ்சு!

சிவராத்திரியை முன்னிட்டு பாட்டி ஊருக்குப் போயிருந்தோம். அங்கு வெள்ளரிக்காய் நிறைய விளையும். நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாட்டி என்னிடம், "அதோ முருகன் நிக்கறான் பாரு. வெள்ளரிப் பிஞ்சு வேணும்னு சொல்லு. சாயங்காலம் ஊருக்குப் போறதுக்குள்ளே பறிச்சிட்டு வருவான்" என்றார். நானும் சொன்னேன். மாலையாகியும் முருகன் வரவில்லை. பாட்டி வேறொருவரிடம் சொல்லி வெள்ளரிக்காய்களை வாங்கி விட்டார். எல்லோ




ரும் ஊருக்குக் கிளம்பினோம். அப்போது முருகன் ஓடிவந்து சிறிய மரப்பெட்டியைக் கொடுத்தார். என்னவென்று விசாரித்தோம். "வெள்ளெலி கேட்டீங்களேன்னு வயல்ல அலைஞ்சு திரிஞ்சு புடிச்சிட்டு வந்தேன்" என்றார். எல்லோரும் திகைத்தோம். "எலியை வச்சு என்ன பண்றது? திருவரங்கன் வாயில் சாப்பாட்டோடு அரைகுறையா சொல்லியிருப்பான். அதான் வெள்ளரிக்குப் பதில் வெள்ளெலி கொண்டு வந்துட்டே" என்றார் பாட்டி.

– பொன். திருவரங்கன்,
மானாமதுரை.

வியர்க்காத மனிதன்!

வெளியில் விளையாடிக் கொண்டிருந்த என் தங்கை என்னிடம் ஓடி




வந்தாள். "அண்ணா வியர்க்காத மனிதர்கள் யாராவது உண்டா?" என்று கேட்டாள். "இப்படிக் கொளுத்தற வெயிலில் யாருக்குத்தான் வியர்க்காது?" என்று கேட்டேன். "நீ வெளியில் வந்து பாரேன். அந்தப் பெரியவர் 'வேர்க்கல, வேர்க்கல'ன்னு கத்திட்டுப் போறார்" என்றாள். நானும் போய்ப் பார்த்தேன். பிறகுதான் புரிந்தது அவர் 'வேர்க்கடலை' என்பதைத்தான் இப்படிச் சொல்கிறார் என்று!

– என். கே. பாலசுப்ரமணியன்,
சென்னை.

களையான தோட்டம்!

எங்கள் வீட்டுத் தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன்.

தேடிப் பிடித்த வெள்ளெலிக்



என் அப்பா பசுமையாக வளர்ந்திருந்த புற்களைப் பறித்தார். "அப்பா! ஏன் அவற்றைப் பறிக்கிறீங்க?" என்று கேட்டேன். "ஏண்டா! களையைக் கூடப் பறிக்கக் கூடாதா?" என்று கேட்டார் அப்பா. "இதுவா களை? இது இருந்தால் தான் தோட்டத்திற்கே களை!" என்று கூறினேன். "தமிழாசிரியரான என்னையே மடக்குறியா?" என்று கேட்டு விட்டுத் தட்டிக் கொடுத்தார் அப்பா.

– ப. செண்பக முருகன்,
சின்னாளப்பட்டி.

குப்பை கொட்டும் இடம்!

எங்கள் பக்கத்து வீட்டு அக்கா என் அம்மாவிடம் புலம்பிக் கொண்டிருந்



தார். "எத்தனை வருஷமா அந்தக் கம்பெனியிலே குப்பை கொட்டறேன். சம்பளம் ஏற மாட்டேங்குதே!" என்றார். அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என் தம்பி, "அக்கா! குப்பையைக் கம்பெனியில் யாராவது கொட்டுவாங்களா? குப்பைத் தொட்டியில் கொட்டுங்கள். அப்போதுதான் சம்பளம் ஏறும்" என்றானே பார்க்கலாம்! நானும் அம்மாவும் சிரிக்க, அந்த அக்காவிற்கோ கோபம் அதிகமானது.

– மு. கந்தவேல்,
தாரமங்கலம்.

என்ன விலை?

நாங்கள் சுற்றுலாச் சென்றிருந்



தோம். இரவு சாப்பிட ஒரு ஹோட்டலுக்குச் சென்றோம். அப்போது பக்கத்து மேசைக்காரர் சர்வரிடம், "பரோட்டா என்ன விலை?" என்று கேட்டார். "ஒண்ணாறு ரூபாய்" என்றார். இரண்டு கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டார். பில் வந்தது. "என்னப்பா! ஒண்ணாறு ரூபாய்ன்னு சொன்னே. இப்ப பன்னிரண்டு ரூபாய் பில் போட்டிருக்கே? மூணு ரூபாய்தானே பில் போடணும்" என்றார். "ஐயா! ஒண்ணு ஆறு ரூபாய்ங்க" என்றார் சர்வர். "சொல்லும் போது தெளிவாச் சொல்லு. இல்லைன்னா என்னை மாதிரி நிறைய பேர் அவஸ்தைப்படுவாங்க" என்று கூறிச் சென்றார்.

– ஜெயகிருஷ்ணன், எட்டாம் வகுப்பு, சீர்காழி.



சிலந்தி

சிக்கல் இல்லாத் திரவ நூலில்
சிலந்தி வலை பின்னுது!
சின்னச் சின்னப் பூச்சி அதில்
சிக்கிக் கொள்ளப் பண்ணுது!

சிக்கிக் கொண்ட பூச்சி தன்னைச்
சிறுகச் சிறுக உண்ணுது!
சினந்த பசி தணிந்த பின்பு
சிகரம் ஏற எண்ணுது!

தக்க துணை ஏதும் இன்றித்
தானாய் ஏறிச் செல்லுது!
தவறிப் பல முறை விழுந்தும்
தன்னம் பிக்கை கொள்ளுது!

சக்தி எல்லாம் திரட்டி ஏறிச்
சாத னையில் வெல்லுது!
சலிப்பு இன்றி முயற்சி செய்தால்
வெற்றி என்று சொல்லுது!

— தளவை இளங்குமாரன்

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 க	த	ம்	ப	ம்	■	2 பு	ம்	3 வ
ரு	■	4 ரோ	■	5 க	ள்	ளி	■	ண்
ம்	■	■	■	6 ந	■	■	■	ண
7 பு	ஷ்	ப	ம்	■	8 க	ண்	ட	ம்
■	■	■	■	■	■	■	■	■
9 ஏ	ற்	ற	ம்	■	ம்	ட	ட்	10 ப
ற்	■	■	■	ம்	■	■	■	ர
கா	■	டை	ட்	11 க	■	12 ப	■	த
டு	ண்	13 வ	■	14 ரா	ஜ	ஸ்	தா	16 ன்



காட்சி 1

இடம்: ரமணி வீடு


ரமணி : (டெலிபோனில்) ஹலோ விமல்! ம்... நான்தான் ரமணி பேசறேன்...

விமல் குரல்: என்னடா ரமணி?

ரமணி: சும்மாதான்டா... பொழுது போகலே. டேய் இந்தக் கோடை விடுமுறைக்கு நீ எங்கேடா போனே?

விமல் குரல்: எங்கேயும் போகலேடா நீ?

ரமணி: நான் நிறைய ஊருக்குப் போயிட்டு வந்தேன். மதுரை, கொடைக்கானல், திருப்பரங்குன்றம், கன்னியாகுமரி. மதுரை மீனாட்சியம்மன் கோவில் எவ்வளவு பெரிசு தெரியுமா? அப்புறம் கொடைக்கானல் மலைமேல பஸ் வளைஞ்சு வளைஞ்சு, ஏறினப்போ ரொம்ப நல்லாயிருந்ததுடா. மேகங்களெல்லாம் மலையைத் தொட்ட மாதிரி எவ்வளவு அழகா போய்க்கிட்டிருந்தது தெரியுமா?....ம்... அப்புறம் திருச்சிக்குக்கூட.... டேய் போனை



ஹலோ, மெல்லப் பேசுங்கள்!

வச்சுடாதே.. சொல்ல வேண்டியது நிறைய இருக்கு...

விமல் குரல்: சொல்லுடா... நிறைய பேசலாம். நம்ம ரெண்டு பேர் வீட்லேயும் போன் வந்திருக்கிறது ரொம்ப வசதியாயிருக்குடா....

மீனா: (குறுக்கிட்டு போனின் பேசு முனையை ஒரு கையால் மூடியபடி) டேய் ரமணி, கொஞ்சம் போனைக் கொடுடா... நான் அவசரமா கலாகிட்டே பேசணும்!

ரமணி: இரு... இன்னும் நான் விமலோடு பேசி முடிக்கலே.

மீனா: நீ இப்போ முடிக்க மாட்டே... நீ 'டூர்' போயிட்டு வந்ததை தொடர்கதையா போனிலே சொல்லிக்கிட்டே போவே. எப்படியும் அரைமணி ஆகும்... அதுக்குள்ளே கலா வெளியிலே போயிருவா!

ரமணி: போகட்டுமே, (டெலிபோன் பேச்சைத் தொடர்கிறான்) விமல், அப்புறம் போன இடத்திலே என்னென்ன வாங்கினோம், என்னென்ன சாப்பிட்டோம்னு சொல்றேன். கேளு! (ரமணியின் டெலிபோன் பேச்சுத் தொடர்கிறது. அம்மா அங்கே வருகிறார்)

அம்மா: என்ன ஒரே கத்தல்?

மீனா: இதோ பாருங்கம்மா, இந்த ரமணி எப்போ போனை எடுத்தாலும் மடமடன்னு பேசி முடிக்காம, வளவளன்னு வம்பளந்துக்கிட்டேயிருக்கான். இன்னிக்கு என் ஃப்ரெண்டு கலாவோட பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி! நம்ம எல்லாரையும் வரச்சொல்லி அழைப்பிதழும் அனுப்பியிருக்கிறதா சொன்னா. ஆனா அழைப்பிதழ் இதுவரைக்கும் வந்து சேரலே. அதனால எந்த இடத்துலே நாட்டிய நிகழ்ச்சி நடக்கப் போறதுன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கணும். இப்பவே மணி அஞ்சு. அவ அநேகமா புறப்பட்டுக்கிட்டிருப்பா!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

அம்மா: டேய் ரமணி, அவளுக்குக் கொஞ்சம் போனை விடுடா. அவசரமா பேசணும்கிறா பாரு!

ரமணி (போனில்): டேய் விமல்... நான் இந்தத் தடவை எல்லா நாளும் டீ ஷர்ட்டுதான் போட்டுக்கிட்டுப் போனேன்.

மீனா: பாருங்கம்மா... இவன் என்ன ஷர்ட் போட்டுக்கிட்டுப் போனான்னு விமலுக்கு ரொம்பக் கவலையா? விமல் வீட்டுக்கே போய் பேச வேண்டியது தானே?


ரமணி: டேய் விமல்! இங்கே போனுக்குப் போட்டி! கொஞ்சம் இரு... அப்புறம் நானே உனக்கு டயல் பண்றேன்... ஏய், இந்தா, சீக்கிரமா பேசிட்டு போனைக் கொடு!

அம்மா: டேய் ரமணி! போனிலே சாதாரணமா பேசினாலே மத்தவங்களுக்குக் கேட்கும்டா! ஏன் இப்படி அனாவசியமா கத்திப் பேசறே? நீ போனை எடுத்தாலே வெண்கலக் கடையிலே யானை புகுந்த மாதிரிதான்.

மீனா: (டயல் செய்துவிட்டு தொடர்பு கிடைக்காமல்) எல்லாம் இவனாலதான். கலா வீட்டிலே போன் அடிச்சுக்கிட்டே யிருக்கு... எல்லாரும் புறப்பட்டுப் போயிட்டாங்க. இப்போ பரத நாட்டிய அரங்கேற்றம் எங்கே நடக்கறதுன்னே தெரிஞ்சுக்க முடியலே...

அம்மா: வேற யார் வீட்டுக்காவது போன் பண்ணிப் பாரேன்.

மீனா: வேற யார் வீட்டுலேயும் போன் இல்லே... ச்சே!



"நீளமான மீன் எது?"
"வி'லாங்'குமீன்தான்!"

— ஜி. குமரேசன்

ரமணி : (மறுபடியும் போன் செய்து) ஹலோ விமல் கொடைக்கானல்லே ஒரு பெரிய குரங்கு எங்கம்மாவோட 'ஹேண்ட் பேக்'கைப் பிடுங்கிட்டு ஓடிருச்சுடா!

மீனா: ம்... பேசு... அந்தக் குரங்குக்கு வாய் எவ்வளவு நீளம், என்ன நிறம், அதுக்கு எத்தனைக் குட்டி எல்லாத்தையும் கணக்கெடுத்துக் கொடு. ரொம்ப முக்கியம்... அம்மா! எனக்குத் தெரியாது.... யார், யார் இப்போ நம்ம வீட்டுக்கு அவசரமா 'கால்' போட்டு கிடைக்காம தவிச்சுக்கிட்டிருக் காங்களோ?. இவன் பாட்டுக்கு இங்கே கால் மேல கால் போட்டுக்கிட்டுக் கவலையே இல்லாம பேசிக்கிட்டிருக்கான்!

அம்மா: ஒரு தடவை சொன்னா பிள்ளைங்க கேட்கணும்!

காட்சி 2

இடம் : ரமணி வீடு

அப்பா: ரமணி! மீனா! இப்படி வாங்க! இன்னிக்கு சாயந்திரம் அஞ்சு மணிக்கு உங்க மாமா அவசரமா நம்ம வீட்டுக்கு போன் பண்ணினாராம்... ரொம்ப நேரம் கிடைக்கவேயில்லையாம்! யார் அவ்வளவு நேரம் பேசியது?

மீனா: யாரு... ரமணிதான்! விமல்கூட டெலிபோன்லே ஒரே அரட்டை!

அப்பா: அப்புறம் மாமா எனக்கும் போன் பண்ணினார். நானும் உடனே ஆபிஸ்லேயிருந்து உங்களுக்கு போன் செய்தேன். கிடைக்கலே. இதனால் என்ன ஆச்சு தெரியுமா? பல விருதுகள் வாங்கின ஒரு சிறுவர் படத்தை நீங்க கோட்டை விட்டுட்டீங்க...

மீனா: எதுப்பா? ஆப்பிரிக்காவில் மீண்டும் டார்ஸான். அந்தப் படமா?

அப்பா: ஆமாம்! மாமாவுக்குக் கிடைச்ச 'ஸ்பெஷல் பாஸ்'லே உங்களைக் கூட்டிக்கிட்டுப் போறதா இருந்தார்! இதுக்குத்தான் அனாவசியமா ரொம்ப நேரம் போனிலே பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன். டேய் ரமணி, என்னடா மறுபடியும் டயல் பண்ணிக்கிட்டிருக்கே? முதல்லே டிரான்ஸிஸ்டரை 'ஆஃப்' பண்ணிட்டு அப்புறம் டெலிபோன்லே பேசுடா.

ரமணி: பரவாயில்லைப்பா... கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் சுவாரசியமா நடந்துக் கிட்டிருக்கு! 'கமெண்டரி' கேட்டுக்கிட்டே



டெலிபோன்லே பேசிக்கிறேன்.

காட்சி 3

இடம்: விமல் வீடு

ஷீலா : விமல்! என்னடா ரமணியோடு போன்லே ஹோட்டல் விருந்து அது இதுன்னு என்னவோ பேசிக்கிட்டே யிருந்தே?

விமல்: ஷீலா, ரமணியோட அப்பாவுக்கு தேசிய சேமிப்புப் பத்திர குலுக்கல்லே ஒரு லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக் காம்! அதுலே நிறைய நகைகள் வாங்கி யிருக்காங்களாம்... ரமணிக்கும் மீனா வுக்கும்கூட ஆளுக்கொரு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்காராம். ரமணியும், அவன் அக்கா மீனாவும் இன்னிக்கு ஹோட்டல் ரம்யகங்காவிலே நமக்கு ஒரு விருந்து கொடுக்கப் போறாங்களாம்... தயாராயிரு!

காட்சி 4

இடம் : ஹோட்டல்

மீனா: ரமணி! நிறைய பேர் வந்து போற ஹோட்டலில் அப்பாவுக்குப் பரிசு விழுந் திருக்கிற விஷயத்தைப் பத்தி இப்படித்தான் கத்திப் பேசறதா? நம்மைச் சுத்தி உட்கார்ந் துக்கிட்டிருந்தவங்க நம்மையே உத்துப் பார்த்துக்கிட்டிருந்தாங்க தெரியுமா? உனக்கு மெதுவா பேசவே தெரியாதா?

ரமணி: நமக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பத்தி சந்தோஷமா பேசிக்கிட்டிருந் தேன். அவ்வளவுதானே! உனக்கு எப் பவும் சந்தேகந்தான்...

மீனா: ரௌடிகளும், திருடர்களும், எப்போ, எந்த இடத்திலே, எந்த உடை யிலே நம்மைக் கவனிச்சுக்கிட்டிருப் பாங்கன்னு சொல்ல முடியாது தெரிஞ் சுக்கோ...

காட்சி 5

இடம்: ரமணி வீடு

ரமணி (போனில்): விமல்! நேத்து எங்க வீட்டு எதிர் வீட்டுலே ஒரு நாய் ஆறு குட்டி போட்டிருக்குடா! ஒவ்வொண்ணும் ஒவ்வொரு கலர்! விமல், இப்ப எங்க வீட்டுலே நான் மட்டும்தான் இருக்கேன். மத்தவங்க வெளியே போயிருக்காங்க! அத னால ஜாலியா ரொம்ப நேரம் பேசுவோம்! இப்பகூட டி.வி. பார்த்துக்கிட்டேதான் பேசறேன். டேய் கொஞ்சம் இரு!

காட்சி 6

இடம்: விமல் வீடு

(விமல் போனுடன் இருக்கிறான்)

திருடன் குரல்: தம்பி! இதோ பார் கத்தி.



"தையல் கடைக்காரர் மகிழ்ச்சியா இருக்காரே, என்ன விஷயம்?"

"அவருக்குப் பு'தையல்' கிடைச்சிருக்காம்!"

— பா. ஜெயக்குமார்

கத்தினால் குத்திடுவோம். மருவாதையா உங்க அப்பா அந்த லட்ச ரூபாயிலே வாங்கி வச்சிருக்கிற தங்க நகைகளை எடுத்துக் கொடு. உன் அப்பா அம்மா வரதுக்குள்ளே எடுத்துக் கொடு... ம்... எழுந்திரு... எழுந்திருடா... போனைக் கீழே வைடா...

விமல்: ஐய்யய்யோ...

ஷீலா: என்ன விமல்?

விமல்: ரமணி வீட்டுக்குள்ளே யாரோ திருடன் நுழைஞ்சிருக்கான். ரமணியை திருடன் மிரட்டற குரல் போனிலே நல்லா கேக்கறது.

ஷீலா: அப்படியா? அப்பாவுக்கு உடனே போன் பண்ணு. நம்ம அப்பா இப்போ போலீஸ் ஸ்டேஷன்லேதான் இருப்பார். இந்தத் திருடன் இன்னிக்கு இன்ஸ்பெக்டர் அப்பாகிட்டே வகையா மாட்டிக்கப் போறான்...

காட்சி 7

இடம்: ரமணி வீடு

(மற்றொரு நண்பன் அப்துலிடம் போனில் பேசிக் கொண்டிருக்கிறான்.)

ரமணி: (போனில்) அப்துல்! நான்தான் ரமணி பேசறேன். போன மாசம் டீ.வி சீரியலுக்காக எங்க தெருவிலே பக்கத்து வீட்டுலே ஷூட்டிங் எடுத்தாங்க. அதுலே எங்க வீடெல்லாம்கூட நல்லா எடுத்திருக்காங்க. அந்த 'சீன்'லே திருடன் ஒரு வீட்டுலே புகுந்து தனியா இருந்த ஒரு பையனை மிரட்டறான். திருடனா நடிச்சவன் நல்லா நடிச்சிருக்கான். அதைத்தான் இப்போ டீ.வி.யிலே காட்டினாங்க... ஆனா திடீர்னு 'கரெண்ட்' கட் ஆயிடுத்து. போன்லே விமல்கிட்டே பேசிக்கிட்டேயிருந்தப்போதான் இந்தக் காட்சியை டீ.வி.யிலே பார்த்தேன். அவன்கிட்டே இதைப் பத்தி சொல்றதுக்குள்ளே டெலிபோன் லைனும் கட்டாயிடுத்து.

அப்பா: (உள்ளே வந்தபடி) டேய் ரமணி! போனை வைடா! உன்னோட முட்டாள்தனமான செய்கையால் என்னென்ன நடந்திருக்கு பாரு! டீ.வி.யைப் பெரிசா வச்சுக்கிட்டு போனிலேயும் பேசிக்கிட்டிருந்ததால, நம்ம வீட்லே திருடன்தான் நுழைஞ்சுட்டான்னு தப்பா நினைச்சுட்டு, விமல் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணியிருக்கான். விமல் அப்பாவும் கான்ஸ்டபிள்களைக் கூட்டிக்கிட்டு ஜீப்பிலே வந்திருக்கார் பாரு. வாங்க இன்ஸ்பெக்டர்!

இன்ஸ்பெக்டர்: ரமணி! விமல் எனக்குப் போன் பண்ணினதும் போலீஸ் ஸ்டேஷன்லே ஒரு முக்கியமான வேலையை அப்படியே விட்டுட்டு ஓடி வந்தோம். போன் பேசும்போது இப்படியா அஜாக்கிரதையா நடந்துக்கறது?

மீனா: டெலிபோன்லே பேசும்போது சுருக்கமா பேசணும், அவசியமான விஷயங்களைப் பத்திதான் பேசணும், பேச்சு நடுவிலே பக்கத்துலே இருக்கிறவங்களோட பேச வேண்டி வந்தா பேசும் முனையைக் கையால மூடிக்கிட்டு பேசணும், பக்கத்துலே டீ.வி, டிரான்ஸிஸ்டர் இருந்தா, அதை ஆஃப் செய்துட்டுப் பேசப் பழகிக்கணும்னு எங்கப்பா இவனுக்குத் தினம் தினம் சொல்லிக்கிட்டிருக்கார் அங்கிள்.

இன்ஸ்பெக்டர்: ஆமாம் ரமணி! டெலிபோன்லே அநாவசிய பேச்சுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. எதையும் சுருக்கமா பேசக் கத்துக்கணும். அப்பத்தான் அவசர செய்திகளைப் பரிமாறிக்க நமக்கு டெலிபோன் லைன் கிடைக்கும்! அந்த அவசரச் செய்தி, திருட்டு, தீ விபத்து இப்படி பல செய்திகளாகூட இருக்கலாம்...

ரமணி: நீங்க சொல்றதெல்லாம் எவ்வளவு உண்மைன்னு இப்போதான் எனக்குப் புரியறது. இனிமே நீங்க சொன்னபடியே நான் போனை பயன்படுத்துவேன். டீ.வி, டிரான்ஸிஸ்டரை ஆஃப் பண்ணிட்டுத் தான் போன்ல பேசுவேன்.



கோகுலம் நியூஸ்

ஆபத்தா?

இரண்டாயிரமாவது ஆண்டு மே மாதம் 5ந் தேதி அனைத்துக் கோள்களும் ஒரே நேர்கோட்டில் வர உள்ளன. இந் நிகழ்வு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதனால் பூமிக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என வானியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 1,000 ஆண்டுகளில் 14 முறை இது போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. கடைசியாக 1962ஆம் ஆண்டு கோள்கள் ஒரே நேர்கோட்டில் காட்சியளித்துள்ளன.

குளோனிங் மாடுகள்

சில ஆண்டுகளுக்கு முன் ஜப்பான் விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் டோலி என்ற ஆட்டுக் குட்டியை உருவாக்கினர். அதேபோல் இப்



போது தாய்ப்பசு கன்று ஈன்றவுடன் கொடுத்த சீயம்பாலிலிருந்து செல்களை எடுத்து குளோனிங் முறையில் கன்றுக் குட்டிகளை உருவாக்கியுள்ளனர். ஏப்ரல் மாதம் 20, 21ந் தேதிகளில் இக்கன்றுகள் பிறந்தன.

நீளமான புல்லாங்குழல்!

சீனாவைச் சேர்ந்த இசை ஆசிரியர் 4.53 மீட்டர் நீளமுடைய புல்லாங்குழலை மூங்கிலில் செய்திருக்கிறார். இந்தக் குழலின் விட்டம் பத்து செ.மீ. உலகிலேயே நீளமான புல்லாங்குழலைச் செய்ததன் மூலம் இந்த ஆசிரியர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

முதல் முறையாக...

இதயம், சிறுநீரகம், கல்லீரல், கண் போன்ற உறுப்புகள்தான் இதுவரை ஒரு உடலிலிருந்து மற்றொருவருக்கு மாற்றாகப் பொருத்தப்பட்டு வந்தது. இப்போது முதல் முறையாக கிளிண்ட் ஹலம் என்பவருக்கு மாற்று கை பொருத்தப்பட்டுள்ளது. விபத்தில் வலது கையை இழந்த இவருக்கு பிரான்ஸில் சென்ற ஆண்டு 13 மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து மருத்துவர்கள் மாற்றுக் கை இணைத்துள்ளனர். மற்ற உறுப்புகளைப் போல் கையைப் பொருத்துவது சுலபமல்ல. கையில் ஏராளமான நரம்புகள் இருப்பதால் வேறொரு கையுடன் இணைவது கடினம். அறுவை சிகிச்சை முடிந்து ஆறு மாதம் ஆன பின் இப்போது கிளிண்ட்ஹலம் கையில் ரத்தம் பாயும் உணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றுக் கை திட்டம் வெற்றி பெறுமா என்பதை அறிய இன்னும் ஒன்றரை ஆண்டுக்காலம் ஆகலாம் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

ஆரோக்கிய ரகசியம்!

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். மாசுபட்ட சுற்றுப்புறச் சூழலை அனுபவித்துக் கொண்டு, ரசாயன உரத்தால் விளைந்த உணவுப் பொருட்களை உட்கொண்டு வாழும் நமக்கு நோயற்ற வாழ்வு கிடைப்பது சாத்தியமில்லை. நோய் வந்தபின் மருத்துவம் செய்வதைவிட நோய் வராமல் தடுப்பது நல்லது அல்லவா! ஆமாம். அதற்கு என்ன வழி என்று கேட்கிறீர்களா? அதுதான் யோகா. சென்னையில் பல இடங்களில் யோகா பயிற்சி மையங்களை நடத்தி வருகிறார் டாக்டர் தி. ஆ. கிருஷ்ணன்.

யோகா என்றால் என்ன?

எண்ணங்களையும் உடலையும் ஒருங்கிணைப்பதே யோகா. ஆசனம் என்பது அதில் ஒரு பகுதி.

உடற்பயிற்சிக்கும் யோகாவிற்கும் என்ன வித்தியாசம்?

உடற்பயிற்சி என்பது உடலை வருத்திக் கொண்டு செய்வது. இதனால் புறத் தோற்றத்திற்கு சில நன்மைகள் ஏற்படலாம். ஆனால் யோகா அப்படி அல்ல. அகத்தையும் புறத்தையும் நெறிப்படுத்தக்கூடியது. யோகாசனம் செய்வதால் உள் உறுப்புகள் நன்றாக இயங்கும். கழிவுகள் வெளியேறும். மனம் ஒருநிலைப்படுத்தப்படும். எதையும் உற்று நோக்கும் சக்தி உண்டாகும். உடற்பயிற்சிக்கு கருவிகள் தேவை. யோகாவிற்கு கருவிகள் தேவையில்லை. யோகா செய்யும்போது வியர்க்கக் கூடாது.

எந்த நேரத்தில் யோகா செய்ய வேண்டும்?

பொதுவாக அதிகாலை 4:30 மணி முதல் 6 மணி வரை செய்யலாம். குளித்து முடித்த பின்பே செய்ய வேண்டும். சில குறிப்பிட்ட நோயாளிகளுக்கு அவர்கள் நோயின் தன்மையைப் பொறுத்து பகலிலோ, மாலையிலோ செய்ய வேண்டியிருக்கும்.

எவ்வளவு நேரம் செய்ய வேண்டும்?

தினமும் அரைமணி நேரம் செய்தால் போதும். முதல் 20 நிமிடம் யோகாசனம், 5 நிமிடம் மூச்சுப் பயிற்சி, 5 நிமிடம் தியானம் செய்தாலே பல்வேறு நன்மைகளை அடையலாம்.

சாப்பிடும் முன்புதான் செய்ய வேண்டுமா?

சாப்பிடும் முன் செய்வது நல்லது. இல்லையென்றால் சாப்பிட்டு 4 மணி நேரம் கழித்தும் செய்யலாம்.

எந்த வயதிலிருந்து கற்க ஆரம்பிக்கலாம்?

சொல்வதைப் புரிந்து செய்யக் கூடிய வயது அதாவது 2, 3 வயதி



விருந்தே யோகா கற்கத் தொடங்கலாம்.

எத்தனை ஆண்டுகள் கற்க வேண்டி வரும்?

யோகாவில் சகலத்தையும் கற்க வேண்டுமானால் 2 ஆண்டுகள் ஆகும். அடிப்படை ஆசனங்களைக் கற்றால் போதும் என்றால் 3 முதல் 6 மாதங்கள் ஆகும்.

யோகாவை வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டுமா?

தினமும் சாப்பிடுவது, தூங்குவது போல நம் வாழ்க்கை முழுவதும் யோகாவை செய்து வந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமிருக்கும். நோய்கள் எளிதில் அண்டாது. ஒரு நாளைக்கு அரைமணி நேரம் செய்தாலும் அதன் சக்தி





அபாரமானது. 16 மணி நேரம் வேலை செய்தால் கூட மன அழுத்தம், களைப்பு ஏற்படாது. புத்துணர்ச்சியுடனே இருப்பீர்கள்.

பாதியில் நிறுத்தினால் பாதிப்பு உண்டா?

உடல் எடை சிறிது கூடும். வேறு பாதிப்பு இல்லை. பாதியில் நிறுத்தி விட்டு மீண்டும் செய்ய ஆரம்பித்தால் கடின முயற்சி தேவைப்படும்.

இதைக் கற்க எவ்வளவு செலவாகும்?

ஒரு மாதத்திற்கு 150 முதல் 200 ரூபாய் வரை செலவாகும்.

எல்லோராலும் பணம் கொடுத்து கற்க முடியாதே?

மருத்துவத்திற்கு செலவு செய்வதை விட ஆரோக்கியத்திற்கு செலவு செய்யலாமே! இந்தப் பணமும் செலவு கிடையாது. நாம் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக வாழ முதலீடு செய்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளலாம்.

உணவுக் கட்டுப்பாடு உண்டா?

சாதாரணமாகவே அரை வயிறு சாப்பாடு, கால் வயிறு தண்ணீர், மீதி கால் வயிறை சும்மா விட வேண்டும். யோகாசனத்துடன் இயற்கை உணவுகளை உண்டு வாழ்ந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

யோகாவிற்கு வரவேற்பு எப்படி இருக்கிறது?

தமிழ்நாட்டில் முன்பை விட இப்பொழுது வரவேற்பு ஓரளவு உள்ளது. வெளிநாட்டில் யோகாவை மிகவும் விரும்புகின்றனர். நம்ம ஊர்ப் பள்ளிகளில் இது கட்டாய பாடமாக்க வேண்டும். ஆந்திராவில் 400 யோகா ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். மருத்துவப் படிப்பிற்கு யோகாவை சிறப்புத் தகுதியாகக் கருதி சேர்த்திருக்கிறாாகள்.

யோகா செய்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் தெரியுமா?

நிச்சயமாக. யோகா செய்யக்கூடிய மாணவன், உடல் உறுதியோடும் எதையும் கூர்ந்து அறியும் திறனோடும் காணப்படுவான். மாணவர்கள் எந்தத் துறையில் நுழைய விரும்புகிறார்களோ அதில் பிரகாசிக்க யோகா மிகவும் உதவுகிறது.

எதிர்காலத்தில் சுற்றுப்புறச் சூழல் அதிகமாக மாசுபடக்கூடும். அதை நம்மால் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் நம்மை நோயின்றி காத்துக் கொள்ள இந்த யோகா தான் சிறந்த வழி.

அட்டையில் : **ஜெயந்த்**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

முகமது அசாருதீன்

டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் நாடுகளின் கேப்டன்களிலேயே மூத்தவர் இவர்தான். ஒரு நாள் கிரிக்கெட்டில் அதிகபட்ச ஆட்டங்களில் (300-க்கும் மேல்) பங்கேற்றவர் இவர் ஒருவரே.

இந்தியாவின் வெற்றிகரமான கேப்டனாக விளங்கும் அசார், ஃபீல்டிங், கேட்சிங் பயிற்சிகள் தருவதில் திறமையானவர். மிக முக்கியமான பேட்ஸ்மேனாகக் கருதப்படுகிறார்.



• அசாருதீன்



• ரணதுங்கா

உலகக் கோப்பை


ஸ்டீவ் வா(ஹ்)

மார்க் டெய்லரைத் தொடர்ந்து வந்திருக்கும் ஆஸ்திரேலியாவின் புதிய கேப்டன். ஒரு நாள் போட்டிகளில் வெற்றி பெற நல்ல உடல்நலம், ஃபீல்டிங், கேட்சிங் திறமைகள் வேண்டும் என்கிறார் இவர். மார்க் வா(ஹ்) உடன் ஒட்டிப் பிறந்த ஸ்டீவ் வா(ஹ்) தற்போது 33 ஆவது வயதில் இருக்கிறார். ஸ்டீவ் பங்கேற்கும் நான்காவது உலகக் கோப்பை இது.

• ஸ்டீவ் வா



• ஸ்டீபன் ஃப்ளமிங்



வாசிம் அக்ரம்

1992 இல் பாகிஸ்தான் உலகக் கோப்பையைக் கைப் பற்றிய இறுதிப் போட்டியில் அக்ரம்தான் ஆட்ட நாயகன். மெல்போர்னில் 87,182 ரசிகர்களுக்கு நடுவே இங்கிலாந்திற்கு எதிராக நடந்த அந்தப் போட்டியில் அக்ரமின் உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சொல்லி மாளாது. கடந்த உலகக் கோப்பை கால் இறுதிப் போட்டியில் அக்ரம் கடைசி நேரத்தில் பங்கேற்கவில்லை.

நவம்பர் 1984 இல், 18 வயதில் ஒரு நாள் போட்டியில் களமிறங்கிய அக்ரம் இன்றும் குறிப்பிடத்தக்க ஆல்ரவுண்டராகத் திகழ்கிறார்.



• ஜார்ஜ் சால்மோண்ட்



• பிரையன் லாரா

ஸ்டீபன் ஃப்ளமிங்

நியூசிலாந்துக்காரரான 26 வயது ஃப்ளமிங்தான் இந்த உலகக் கோப்பை

கேப்டன்களில் இளமையானவர். நல்ல கேட்சிங் சாதனைகளைக் கையில் வைத்திருக்கும் இவர் பேட்டிங்கிலும் திறமையானவர். 23 ஆவது வயதில் கேப்டன் பொறுப்பேற்றார்.




• குரோனியே



• அலிஸ்டெய்ர் கேம்ப்பெல்



• ஆசிப் கரீம்



• ஸ்டுவர்ட்

மாற்றம் செய்வது அர்ஜுனாவிற்குக் கைவந்த கலை. மைதானத்தில் பதட்டமடையாமல் நிதானமாகச் செயல்படுவது இவரது சிறப்பம்சம்.

கேப்டன்கள்!

அலெக் ஸ்டுவர்ட்

ஏழாவது உலகக் கோப்பை போட்டியை நடத்தும் இங்கிலாந்து அணியின் கேப்டன். விக்கெட் கீப்பர் மற்றும் தொடக்க ஆட்டக்காரராகவும் விளங்கி அணிக்கு உற்சாகமூட்டுகிறார் ஸ்டுவர்ட். இவருக்கு வயது 36.

அர்ஜுன ரணதுங்கா

உலகக் கோப்பையை தற்போது கையில் வைத்திருக்கும் இலங்கை அணியின் கேப்டன். 19 ஆவது வயதில், உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்றதே அர்ஜுனாவின் முதல் உலகக் கோப்பை அனுபவம். கடந்த சில ஆண்டுகளில் இலங்கை அணி பல தோல்விகளைச் சந்தித்தாலும் இவரது கேப்டன் பதவிக்கு ஆபத்து நேரவில்லை. எதிரணி பேட்ஸ்மேனின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப பந்து வீச்சு மற்றும் ஃபீல்டிங்கில்



• அமினுல் இஸ்லாம்



• வாசிம் அக்ரம்

பிரையன் லாரா

மேற்கிந்தியத் தீவுகளின் அனுபவம் குறைவான புதிய கேப்டன் பிரையன் லாரா. ஆனால் உலகின் மிகச் சிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவர். அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவிற்கு எதிரான தொடர் போட்டிகளில் சமநிலை ஏற்பட லாராவின் பேட்டிங் மட்டுமே காரணமாக

உலகக் கோப்பை டேட்டா

◆ 1996 இல் அர்ஜுன ரணதுங்கா 29 பந்துகளில் 50 ரன்கள் சேர்த்தார்.

◆ 1983இல் கபில்தேவ் 72 பந்துகளில் 100 ரன்கள் குவித்தார்.


◆ 1996இல் கேரி கிரிஸ்டன் எடுத்த 188 ரன்கள் உலகக் கோப்பையில் அதிகபட்ச ரன்களாகும்.

◆ 1987இல் விவியன் ரிச்சர்ட்ஸ் ஒரே போட்டியில் 7 சிக்ஸர்களை விளாசினார்.

◆ 1975இல் டென்னிஸ் அமிஸ் ஒரே போட்டியில் 18 பந்துகளை பவுண்டரிக்குத் துரத்தினார்.

◆ 1975 - 1996 வரை உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்று ஜாவித் மியான்டாட் சேர்த்த ரன்கள் 1083.

◆ 1996 உலகக் கோப்பை போட்டியில் மட்டும் சச்சின் டெண்டுல்கர் குவித்த ரன்கள் 523.



• மியான்டாட்

◆ 1996இல் மார்க் வா(ஹ்) அடுத்தடுத்து இரு சதங்கள் அடித்தார்.

• சச்சின்



◆ 1996இல் 50 ஓவர்களில் கென்யாவிற்கு எதிராக இலங்கை 5 விக்கெட் இழப்பிற்கு 398 ரன்கள் சேர்த்தது.

◆ 1979இல் இங்கிலாந்துக்கு எதிராக கனடா 40.2 ஓவர்களில் 45 ரன்களை மட்டுமே சேர்க்க முடிந்தது.

◆ உலகக் கோப்பை போட்டிகளில் அதிகமுறை

அமைந்தது. 30 வயதான லாராவே டெஸ்ட் கிரிக்கெட்டின் ஒரே இன்னிங்சில் அதிக ரன்கள் (375) எடுத்த சாதனையாள ராக இன்றும் திகழ்கிறார்.

ஹன்சி குரோன்யே

அண்மைக் காலமாக தென் ஆப்பிரிக்கா அதிக கிரிக்கெட் வெற்றி களைப் பெறச் செய்தவர் குரோன்யே தான். கட்டுக்கோப்பான ஒரு அணியின் கேப்டனாக ஹன்சி திகழ்கிறார். அணியில் நிறைந்து காணப்படும் மற்ற ஆல்ரவுண் டர்களைப் போலவே ஹன்சியும் பேட் டிங் மற்றும் பௌலிங்கில் பிரகாசிக் கிறார்.

அலிஸ்டெய்ர் கேம்ப்பெல்

கடந்த ஆண்டுகளில் இந்தியா, பாகிஸ் தான் நாடுகளை சில டெஸ்ட் போட்டி களில் வெல்ல ஜிம்பாப்வே அணிக்கு உதவியவர் கேப்டன் கேம்ப்பெல். 1992 உலகக் கோப்பை போட்டியில் கேம்ப்பெல் அறிமுக மானார். கேம்ப்பெல் ஜிம்பாப்வே அணி மெருகேற மேலும் உதவுவார் என்பதில் ஐயமில்லை.

ஆசிப் கரீம்

இந்த இடதுகை ஸ்பின்னருக்கு வயது 35. 1980 இல் கென்யா அணியில் இடம்



• கபில்தேவ்

பங்கேற்றவர் ஜாவித் மியான்டாட். 1975 முதல் 1996 வரை 6 போட்டிகளில் 33 முறை களமிறங்கியுள்ளார்.

◆ உலகக் கோப்பை போட்டிகளில் 26 முறை தொடர்ச்சியாக களமிறங்கியவர் கபில் தேவ் ஒருவரே (1979 - 1992).

◆ அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பெருமை இம்ரான்கானுக்குக் கிடைத்திருக்கிறது. 1975 முதல் 1992 வரை 34 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கிறார்.

◆ ஒரே உலகக் கோப்பை போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியது ரோஜர் பின்னி மட்டுமே. 1983இல் 18 விக்கெட்டுகளைப் பறித்தார்.

◆ 1983இல் லீட்ஸில் ஆஸ்திரேலியாவிற்கு எதிராக வின்ஸ்டன் டேவிஸ் (மேற்கிந்தியத் தீவு) 51 ரன்களுக்கு 7 விக்கெட்டுகள் எடுத்ததே சிறந்த உலகக் கோப்பை வீச்சு.

◆ உலகக் கோப்பை போட்டிகளில் கிளைவ் லாயிட், கபில் தேவ், டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் ஆகியோர் 12 கேட்சுகள் பிடித்திருக்கிறார்கள்.

◆ குறைந்த வயதில் உலகக் கோப்பையில் சதம் அடித்தவர் ரிக்கி போண்டிங். அவர் 1996இல் மேற்கிந்தியத் தீவிற்கு எதிராக ஜெய்ப்பூரில் சதம் அடித்தபோது வயது 21.

விக்கெட் கீப்பர்களில் ஒரே போட்டியில் 5 பேரை ஆட்டமிழக்கச் செய்தவர்கள்:

சையத் கிர்மானி 1983இல் ஜிம்பாப்வேக்கு எதிராக (எல்லாமே கேட்சுகள்).

ஜிம்மி ஆதம்ஸ் 1996இல் கென்யாவுக்கு எதிராக (4 கேட்ச், 1 ஸ்டம்பிங்).

ரசீத் லத்தீப் 1996இல் நியூசிலாந்திற்கு எதிராக (4 கேட்ச், 1 ஸ்டம்பிங்).

பிடித்தார். கடந்த ஆண்டு குவாலியரில் இந்தியாவை தோற்கடித்து வியப்புறச் செய்தார்.

ஜார்ஜ் சல்மோண்ட்

இங்கிலாந்திற்கு அருகில் இருக்கும் ஸ்காட்லாந்தின் கேப்டன் சல்மோண்ட். தாக்குதல் ஆட்டம் ஆடுவதில் இவர் வல்லவர்.

அமினுல் இஸ்லாம்

31 வயது வலதுகை பேட்ஸ்மேனான இஸ்லாம் அண்மையில்தான் மொஹமத் அக்ரம் கானிடமிருந்து கேப்டன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1988இல் அறிமுகமான இவர் பங்களாதேஷ் அணியின் மிக முக்கியமான பேட்ஸ்மேனாக விளங்குகிறார். 1997இல் கோலாலம்பூரில் நடைபெற்ற ICC டிராபியின் மிகச் சிறந்த ஃபீல்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எந்தக் கேப்டன் தன் அணியை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்கிறார் என்பதை இவ்விதழ் படிக்கும் போதே, பார்க்கத் தொடங்கியிருப்பீர்கள். அடுத்த இதழில் கிரிக்கெட் – மேலும் கிரிக்கெட்!

— விளையாட்டுப் பையன்

நீங்களும் மாஜிக் செய்யலாம்!



முட்டை மூழ்குமா, மிதக்குமா?

தேவையானவை :

3 பாட்டில்கள்
1 முட்டை
உப்பு
தண்ணீர்

எப்படி செய்வது?

மாஜிக் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பே ஒரு பாட்டிலில், நல்ல தண்ணீரும், இன்னொரு பாட்டிலில் உப்பு அதிகமாகக் கலந்த தண்ணீரும் ஊற்றி வையுங்கள். மூன்றாவது பாட்டிலில் உப்பு கலந்த நீர் பாதியளவும் நல்ல தண்ணீர் பாதியளவும் ஊற்றி வையுங்கள். இவை நீங்கள் மாஜிக் செய்து காட்டப் போகும் நண்பர்களுக்குத் தெரிய வேண்டாம்.

டேபிள் மீது முதலில் உப்பு நீர் பாட்டிலையும், அடுத்து நல்ல தண்ணீர் பாட்டிலையும் மூன்றாவதாக உப்புத் தண்ணீர் + தண்ணீர் கலந்த பாட்டிலையும் வரிசையாக வைத்து விடுங்கள்.


நண்பர்களிடம் முட்டையைக் காட்டி 'முட்டை தண்ணீரில் மூழ்குமா, மிதக்குமா?' என்று கேளுங்கள். அவர்கள் மூழ்கும் என்பார்கள். உடனே முட்டையை உப்புக் கலந்த நீரில் போடுங்கள். அவர்கள் எதிர் பார்க்கா வண்ணம் முட்டை நீரில் மிதக்கும். எல்லோரும் வியந்து போவார்கள். மீண்டும் முட்டையை எடுத்து 'மூழ்குமா, மிதக்குமா?' என்று கேளுங்கள். 'மிதக்கும்' என்பார்கள். நல்ல தண்ணீர் பாட்டிலுக்குள் முட்டையைப் போடுங்கள். முட்டை நீரில் மூழ்கும். மீண்டும் முட்டையை எடுத்து 'மூழ்குமா? மிதக்குமா?' என்று கேளுங்கள். மூழ்கும் என்று சிலரும் மிதக்கும் என்று சிலரும் கூறுவார்கள். மூன்றாவது பாட்டிலில் முட்டையைப் போடுங்கள். முட்டை மூழ்கவும் செய்யாமல், மிதக்கவும் செய்யாமல் நடுவில் இருக்கும். எல்லோரும் வியந்து பாராட்டுவார்கள்.

காரணம் என்ன?

சாதாரண தண்ணீரை விட உப்புக் கலந்த நீர் அதிக அடர்த்தி உடையது. எனவே உப்பு நீரில் முட்டை மிதக்கிறது. பாதி உப்பு நீர் + தண்ணீர் கலந்த பாட்டிலில் உப்பின் அடர்த்தி குறைவாக இருப்பதால் முட்டை நடுநிலை வகிக்கிறது.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்







படத்தை நிறைவு செய்யுங்கள்!

எந்த இரண்டு பூச் செடிகள் ஒன்றாக உள்ளன?

விடை: 1, 3.





இங்கு எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

விடை: 13

நான் யார்?

1. நான் உலோகப் பறவை. என்னில் நீங்கள் பயணம் செய்யலாம்.
2. நான் கடலில் பிறந்தவன், கடையில் கிடைப்பவன், உணவுக்குத் தேவையானவன்.
3. என் தலையை 180° கோணத்தில் சுழற்ற முடியும். இரவில் இரை தேடுவேன்.
4. பறவைகளில் நீரை உறிஞ்சிக் குடிப்பவன் நான் மட்டுமே.

– டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம்

விடை: 1. விமானம், 2. உப்பு, 3. ஆந்தை, 4. புறா

"தலை சீவிக் கிட்டிருக்கானே அவன் யாரு?"
"சிரஞ்சீவி!"
- கங்கா கணேசன்





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka